
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 13 டிசம்பர் - 2000 இதழ் - 12



அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப் பண்ணும்,
உம்மை நம்பியிருக்கிறேன், நான் நடக்க வேண்டிய வழியை
எனக்குக் காண்பியும்...... சங்கீதம். 143:8

# அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை(112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு,உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தங்கள் அனுப்பப்படும். அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ.20/-

*தொடர்பு முகவரி:*

*தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்*
*தபால் பெட்டி எண் 27,*
*காங்கயம் - 638 701. இந்தியா*

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்

## ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 01 |
| 2. | வாரத்தின் முதல் நாள் | 09 |
| 3. | பெண்கள் பகுதி | 12 |
| 4. | ரூத் ஒரு கண்ணோட்டம் | 15 |
| 5. | வாலிபர் பகுதி | 16 |
| 6. | வெளிப்படுத்தின விசேஷம் | 20 |
| 7. | தெரிந்து கொள்ளுங்கள் | 25 |
| 8. | உள்ளான மனுஷன்... | 30 |

# THRUMARAI AASAAN

**Published by Church of Christ**

**Editor**
**S. RAJANAYAGAM**

**Honorary Editor**
**J.C. CHOATE**

**Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamil Nadu, India**
**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol .13 December- 2000 Issue - 12**


*ஆசிரியவுரை*

# உத்தமமாய்ப் பின்பற்றுவோம்

சில நேரங்களில், நாளிதழ்களை நாம் புரட்டிப் பார்க்கும்போது,அதுவரை நாம் கேள்விப்பட்டிராத, சில விலங்கினத்தின் பெயரை அல்லது பெயர்களைக் குறிப்பிட்டு, அவை முன்னொரு காலத்தில் இருந்ததாகவும், ஆனால், தற்போது அறவே அற்றுப்போயிற்றென்றும் போட்டிருப்பர். அவைகள் இருந்ததென்பதற்கு ஆதாரமாக, எதையாவது எழுதியிருப்பர். இப்படிப்பட்ட செய்திகளை அவ்வப் போது நீங்களும். பார்த்திருக்ககூடும்.என்ன இது, வருடத்தின் இறுதியில் பேசுவ தற்கு எத்தனையோ காரியங்கள் இருக்கும்போது, இருந்து, இல்லாமற்போன மிருகத்தைப் பற்றிப் பேசுகிறேன் என்று நினைக்கிறீர்களா? இல்லையில்லை, அப்படி எண்ணி விடாதீர்கள். மனிதர்களைப் பற்றிப் பேசி, அதிலும் குறிப்பாக தேவமனிதர்களைப் பற்றிப் பேசி,எழுதி,ஒருபோதும் சலிப்போ அல்லது அலுப்போ வராதாகையால், மிருகங்களைப் பற்றிப் பேசும் அவசியம் நமது இதழுக்கு ஒருபோதும் வராது. ஆகவே, தொடர்ந்து தைரியமாகப் படியுங்கள்.

இப்படி, இருந்து இல்லாமற்போன உயிரினங்கள் பற்றி, நாளிதழ்களில் நாம் படிக்க நேரும்போது, எப்படி அவை பூமியில் இருந்து, பிறகு ஒரு காலகட்டத்தில் இல்லாமல் போயினவோ,அதுபோல,முன்னொரு காலத்தில் மனிதனுக்குள்ளாக இருந்த சில பண்புகள், தற்போது இல்லாமல் போய்விட்டதோ என்று எண்ணத்தோன்றும். குறிப்பாக, தேவனுக்குப் பயப்பட விரும்பும் ஜனங்களுக்குள்ளாக இருக்கவேண்டிய பண்புகள், இக்காலத்தில் மறைந்து போய்விட்டதோ என்றும், அல்லது மாசுபடிந்து மங்கி விட்டதோ என்றும் சந்தேகப்பட வைக்கும்.அப்படி நம்மை சந்தேகப்பட வைக்கக் கூடிய பண்புகளில், தலையானதாக, இருக்கக்கூடிய தகுதி "உத்தமத்திற்கு" உண்டு.

**"உத்தமம்"** என்ற இவ்வார்த்தை, மிக மேன்மையான குணத்தை, தெய்வீகப் பண்பைக் குறிக்கும் ஓர் உன்னத வார்த்தை. தேவனுக்கு உகந்தவர்கள் என்று, வேதாகமத்தால் சாட்சி பகரப்பட்டிருக்கிற எல்லோருக்குமே கூட இவ்வார்த்தை பயன்படுத்தப்படாமல், வெகுசிலருக்கு மாத்திரமே உரித்தாக்கப்பட்டிருக்கிறது. அதிலும், குறிப்பாக, பழைய ஏற்பாட்டு பக்தர்களில், விரல் விட்டு எண்ணக்கூடியவர்களை மாத்திரமே, பரிசுத்த ஆவியானவர் இவ்வார்த்தையால் அலங்கரிக்கிறார். அப்படியானால், புதிய ஏற்பாட்டின் கீழ் வாழ்ந்து மரித்த பரிசுத்தவான்கள், யாருக்குமே, இவ்வார்த்தைக்குச் சொந்தம் கொண்டாடும் தகுதியில்லையா என்று கேட்டுவிடாதீர்கள். அதுவல்ல, எனது வாதம். மாறாக, பழைய ஏற்பாட்டுப் பக்தர்களுக்கு, நேரிடையாகப் பயன்படுத்தப்பட்டதுபோல, புதிய ஏற்பாட்டில் இல்லையென்பதே நான் இங்கே சொல்ல வருவது.

நமது இரட்சகராகிய இயேசுவானவர், ஒரு சமயம், நாத்தான்வேலைக் கபடற்ற "உத்தம" இஸ்ரவேலன் என்று கூறுகிறார்.(யோவான்.1:47). விசுவாசத்தில் தான் பெற்றெடுத்த மகனாகிய தீமோத்தேயுவை,அப்போஸ்தலன் பவுல் **"உத்தம"** குமாரனென்று அழைத்துள்ளார். (1.தீமோ.1:2). இவை தவிர, வேறு சில சந்தர்ப்பங்களிலும் **"உத்தமம்"** என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இப்படி இரண்டு ஏற்பாடுகளிலும், நாம் மேலே கண்ட தாசர்களின் குணங்கள் பற்றிக் குறிப்பிடுவதற்கு, நம்முடைய தமிழ் வேதாகமம் "உத்தமம்" என்ற ஒரே வார்த்தையைப் பயன்படுத்தியிருந்தாலும்,ஆங்கில வேதாகமமும், மூலமொழியும் இவர்களுக்கெல்லாம் வித்தியாசமான வார்த்தைகளையே பயன்படுத்தியிருக்கிறது. இங்கே நமக்கு, பழைய ஏற்பாட்டு உத்தமம் சிறந்ததா அல்லது புதிய ஏற்பாட்டு உத்தமம் சிறந்ததா என்ற ஆராய்ச்சியெல்லாம் அவசியமில்லாதது. ஏனெனில், பழைய ஏற்பாட்டில் உள்ள நோவா, யோபு, காலேப், தாவீது போன்றவர்களும், புதிய ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ளவர்களும், தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டு , இயேசுவானவரால் பேசப்பட்டு, ஆவியானவரால் அங்கீகரிக்கப்பட்டு, பரிசுத்த எழுத்துக்களில் இடம்பெற்றிருக்கும் உயர்ந்த மனிதர்கள். ஆயினும் மேற்சொன்னவர்களைப் பற்றி நாம், விபரமாகப் படிக்க முயலும்போது, இவர்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தைகளின் வேறுபாடு கவனிக்கத்தக்க ஒன்றாகி விடுகிறது.

உதாரணத்திற்கு,எப்புன்னேயின் குமாரனாகிய காலேபை எடுத்துக் கொள்வோம். கானான் தேசத்தை வேவுபார்க்கும்படி மோசேயால் அனுப்பப்பட்ட 12 வேவுகாரர்களில் இவனும் ஒருவன். இவனோடு சென்றுவந்த 12 பேரில், 10 பேர் ஜனங்களின் இருதயம் கரைந்து போகும்படியான செய்தியைக் கொடுத்தபோது, இந்த காலேபும், யோசுவாவும், நற்செய்தியை நம்பிக்கையோடு கொடுத்தனர். (எண்.13:அதி)மெஜாரிட்டி வேவுகாரர்களின் துர்ச்செய்தியால், கலவரப்பட்ட ஜனங்கள், மோசேக்கு விரோதமாக கலகம்பண்ணி, நற்செய்திசொன்ன யோசுவாவையும், காலேப்பையும், கல்லெறிந்து கொல்லப்பார்த்தார்கள்.

(எண்.14:10)அந்த அநியாயக் கிளர்ச்சியை பொறுக்க முடியாத தேவன், கோபம் மூண்டவராகி எல்லாரையும் சுதந்திரத்திற்கு புறம்பாக்கி, அழிக்க முடிவு செய்தார். (எண்.14:12) அப்பொழுது, மோசே இஸ்ரவேலருக்காக மன்றாடினதினிமித்தம், தனது கோபத்தைக் குறைத்து, ஜனங்களை அழிக்கும் முடிவை மாற்றினார். ஆயினும் இந்த ஜனங்கள் அவரை பத்துமுறை பரீட்சை பார்த்ததினிமித்தம், எகிப்திலிருந்து புறப்பட்ட ஒருவரும் கானான் தேசத்தை காணமாட்டார்கள் என்று ஆணை யிட்டார்(வசனம் 22,23).

அப்படி தேவன் ஆணையிட்டபொழுது தான், காலேப்பை பற்றி இவ்விதம் சொன்னார். ***"என்னுடைய தாசனாகிய காலேப் வேறே ஆவியை உடையவனா யிருக்கிறபடியினாலும், உத்தமமாய் என்னைப் பின்பற்றி வந்த படியினாலும், அவன் போய் வந்த தேசத்திலே அவனைச் சேரப்பண்ணுவேன்; அவன் சந்ததியார் அதைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்" என்று.*** (எண்.14:24) (எண்.14:30). தேவன், காலேப் பற்றி சாட்சி சொன்ன இந்த இடத்தில், காலேபுக்கு, நமது தமிழ் வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிற **"உத்தமம்"** என்ற வார்த்தைக்கு, ஆங்கில வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிற வார்த்தையின் நேரடிபொருள் **" முழுமை"** என்பதாகும்.அதாவது, காலேப், தேவனை **முழுமையாகப்** பின்பற்றினான் என்பது.

இந்த காலேபும், அவனோடு இருந்த யோசுவாவும், தேவனை முழுமையாகப் பின்பற்றினார்கள் என்று சொன்னால், அதன் பொருள், இவர்களோடு எகிப்திலிருந்து புறப்பட்ட மற்றவர்கள் முழுமையாக பின்பற்றத் தவறிவிட்டார்கள் என்பதே. இன்னும் சரியாக சொல்வதானால், அவர்கள் அரையும், குறையுமாகவே தேவனைப் பின்பற்றியுள்ளனர். தேவனை அரையும், குறையுமாகப் பின்பற்றுவது ஆபத்தானது, அர்த்தமற்றது என்பதற்கு **"எகிப்திலிருந்து புறப்படுதலும், கானானில் சேருதலும்"** மிகச் சிறந்த உதாரணமாக உள்ளது. ஆம், ஆறுலட்சத்தில் இரண்டே இரண்டுதான் நிறை. மீதியெல்லாம் அரை,குறை. என்ன ஒரு பரிதாபம்! தன்னைப் பின்பற்ற விரும்பும், ஒவ்வொருவனும் தன்னை முழுமையாகப் பின்பற்ற வேண்டு மென்றே தேவன் விரும்புகிறார். அரைகுறைக்கு அவர் ஒருபோதும் ஆதரவளிப் பதுமில்லை, அவர்களை அங்கீகரிப்பதுமில்லை, அவர்களுக்கு பலனளிப்பது மில்லை.ஒருசமயம் நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து, நியாயசாஸ்திரி ஒருவனின் கேள்விக்கு பதிலளித்த போது, இவ்விதம் கூறியுள்ளார். ***"உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழுஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக"*** என்று (மத்.22:37) வேறொரு சமயம், நமதாண்டவரின் கேள்விக்கு, நியாயசாஸ்திரி ஒருவன் நியாயப்பிரமாணத்தில், ***"உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும், உன் முழுச் சிந்தையோடும் அன்புகூருவாயாக"*** என்று எழுதியிருக்கிறது என்று சொன்னார். (லூக்.10:27)தேவன், அவரை நேசிக்கிற பிள்ளைகளிடத்தில்

எப்பொழுதும் முழுமையைத் தான், தேவன் எதிர்பார்க்கிறார். அவரைப்பின்பற்றுகிற காரியத்திலும், அவருடைய எதிர்பார்ப்பு இதுதான். தேவனுடைய இந்த எதிர்பார்ப்பை நம்முடைய காலேப் அப்படியே முழுமையாக நிறைவேற்றியுள்ளான்.

அப்படியானால், கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்கிற மக்களின் நிலை இன்றைய நாட்களில் எப்படியுள்ளது? அவரைப் பின்பற்று கிறவர்கள் காலேப் போல முழுமையாக பின்பற்றுகிறார்களா? அல்லது அரை குறையாக பின்பற்றுகிறார்களா? கிறிஸ்துவின் உபதேசங்களை தங்கள் அன்றாட வாழ்க்கையிலும், தாங்கள் சார்ந்திருக்கும் பல பிரிவுக்கூட்டங்களிலும் முழுமையாகப் பின்பற்றுகிறார்களா? அல்லது அரையும் குறையுமாக பின்பற்று கிறார்களா? எகிப்திலிருந்து புறப்பட்ட ஆறுலட்சம் புருஷர்களில் இரண்டே இரண்டுபேர்தான் முழுமையாகப் பின்பற்றி இருக்கிறார்கள் என்பதிலி ருந்து, இஸ்ரவேல் மக்களின் " பின்பற்றும் லட்சணம்" எப்படியிருந்ததென்று நன்றா கவே தெரிகிறது. ஆம்,அது, அவலட்சணமான பின்பற்றுதலாகவே இருந்து ள்ளது. அருமையானவர்களே, நம்முடைய பின்பற்றும் இலட்சணம் இன்றைக்கு எப்படி யுள்ளது? நம்மைக் காட்டிலும் அவர்களே பரவாயில்லை என்று சொல்லத் தக்க அளவில், அவர்களுக்கு நல்லபெயரை வாங்கித்தரும் பின்பற்றுதலாக உள்ளதா? அல்லது காலேபின் பின்பற்றுதல் போல் முழுமையானதாக உள்ளதா? சொல்லுங்கள்.

சரி, இந்த காலேப், தேவனை முழுமையாகப் பின்பற்றுவதற்கு அவனுக்கு உதவியாக இருந்த மற்ற சில பண்புகள் என்னவென்று நாம் தெரிந்துகொண்டால் நாமும், எதிர்வரும் புதிய ஆண்டில், காலேபைப் போல முழுமையாக பின்பற்றுவதற்கு உதவிகரமாக இருக்குமாகையால், அவைகளில் இப்பொழுது நம்முடைய சிந்தையை செலுத்துவோம்.

## I காலேபின் விசுவாசம்

தேவனை முழுமையாகப் பின்பற்றின இந்தக் காலேபிடமிருந்து, நாம் தெரிந்துகொள்ள வேண்டிய முதல் குணம், அவனுடைய **விசுவாசம்**. ஆம், அவன், தேவன் மீதும், அவருடைய வல்லமையின் மீதும் வைத்த அசைக்க முடியாத நம்பிக்கை.

நம்பிக்கையற்ற மற்ற 10 பேரும் சொன்ன துர்ச்செய்தியைக் கேட்டு, இந்த அவிசுவாசமுள்ள ஜனங்கள், மோசேக்கு விரோதமாகவும், தங்களுக்கு விரோதமாகவும் எழும்பினபோது, தங்கள் உயிரைத் துச்சமென நினைத்து, ஒட்டுமொத்த சபையாரிடத்திலே அவன் சொன்ன வார்த்தையைக் கவனியுங்கள். ***"கர்த்தர் நம்மேல் பிரியமாயிருந்தால், அந்தத் தேசத்திலே நம்மைக் கொண்டு போய், பாலும், தேனும் ஓடுகிற அந்த தேசத்தை நமக்குக் கொடுப்பார். கர்த்தருக்கு விரோதமாக மாத்திரம் கலகம் பண்ணாதிருங்கள்; அந்த தேசத்தின்***

***ஜனங்களுக்கு நீங்கள் பயப்படவேண்டியதில்லை, அவர்கள் நமக்கு இரையாவார்கள்; அவர்களைக் காத்த நிழல் அவர்களை விட்டு விலகிப் போயிற்று; கர்த்தர் நம்மோடேயிருக்கிறார்; அவர்களுக்குப் பயப்பட வேண்டியதில்லை என்றார்கள்''*** (எண்.14:8,9).இந்த வசனத்தில் மிளிருகின்ற விசுவாசம் உங்கள் கண்களுக்கு தெரிகிறதா?

மற்ற பத்துப்பேருடனே தான், இவனும் பயணம் செய்தான். அவர்கள் சுற்றிப்பார்த்த இடங்களைத் தான் இவனும் பார்த்தான். அவர்கள் கண்ட பட்டணங்களையும், அதின் மதில்களையும் தான் இவனும் கண்டான். அவர்கள் பார்த்த இராட்சத மனிதர்களைத் தான் இவன் கண்களும் கண்டது. அப்படியானால் நம்பிக்கையற்ற மற்ற பத்துபேருக்கும், இவனுக்கும் என்ன தான் வித்தியாசம்? அவர்கள் தங்கள் புறக்கண்களால், தேசத்தையும்,அதின் குடிகளையும் கண்டார்கள். ஆனால், இந்த காலேபோ தன் புறக்கண்களால் தேசத்தையும், தன் அகக்கண்களால் தன்னை அனுப்பின தேவனுடைய வாக்குத்தத்தங்களையும், அவைகளை நிறைவேற்ற அவர் வல்லவராயிருக்கிறார் என்பதையும் கண்டான். கானானை சுதந்தரித்துக் கொள்வதற்கு **எதிரான சூழ்நிலை** நிதர்சனமாகத் தெரிந்தும், தேவனாலே கூடும் என நம்பினான், விசுவாசித்தான்.

அருமையானவர்களே, இன்றைக்கு நம்முடைய விசுவாச நிலை எப்படியுள்ளது? எல்லாம் நமக்கு சாதகமாக இருக்கும்போது, அது நடக்கும் என்று நம்புவதற்கு நாம் தயாராக இருக்கிறோம். தேவனால் கூடுமென்று சொன்னால் ஏற்றுக் கொள்கி றோம்.ஆனால், சூழ்நிலை எதிராக இருக்கும்போது, தடுமாறுகிறோம். நம்ப விரும்பியும் நம்பமுடியாமல் திணருகிறோம். அது எப்படி சாத்தியமாகும் என்று பல கணக்குகளை மனதுக்குள் போட்டுப்பார்த்து, தேவனுடைய வல்லமைக்கு நாம் எல்லை வகுக்கிறோம். எப்படி, நான் சொல்வது சரிதானே! சொல்லுங்கள்.

ஆனால், இந்த காலேப் போல, நாம் தேவனை முழுமையாகப் பின்பற்ற வேண்டுமானால், விசுவாச விஷயத்தில் நாம் தடுமாறுகிறவர்களாக இருக்கக் கூடாது. நம்முடைய அறிவுக்கும், நம்முடைய பல கணக்குகளுக்கும் நாம் விடை கொடுத்துவிட்டு, அவரால் கூடும் என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும். அப்படி ஏற்று, நம்முடைய காலேப் போல, தேவனை முழுமையாகப் பின்பற்றுவோமானால், காலேப் கானானை சுதந்தரித்துக் கொண்டதுபோல, நாமும் பரம கானானை சுதந்தரித்துக் கொள்வோம்.

## II காலேபின் உள்ள உறுதி

தேவனை முழுமையாகப் பின்பற்றின இந்த காலேபிடமிருந்து நாம் தெரிந்து கொள்ளக் கூடிய இரண்டாவது குணம்,அவனுடைய*உள்ள உறுதி* - **தைரியம்.** ஆம், அவன் தன்னோடிருப்பவர்கள் எடுத்த முடிவைக் கண்டு கொஞ்சமும் மனம் தளரவில்லை.நாம் அறிந்தபடி வேவுபார்க்கச் சென்றவர்கள் 12 பேர்.அதில் பத்துப்பேர் இவனுக்கு எதிரணியில், இவனோடு யோசுவா மாத்திரம். ஆனாலும்,

இவன் தனது விசுவாசத்தை விட்டுக்கொடுக்காமல் உறுதிகாட்டினான். பின்னாளில், யோசுவா இவனை முந்திக் கொண்டாலும், இக்காலகட்டத்தில், நீங்கள் வேதாகமத்தைக் கவனித்துப்படித்தால் இவன் பெயர் தான் முதலில் வருகிறது. (எண்.13:30; 14:30; 32:11). அடுத்தது தான் யோசுவா, ஆக, திடமான மனதைப் பொறுத்தளவில், யோசு வாவைக் காட்டிலும், இந்தக் காலேபே சிறந்தவனாக இருந்துள்ளான்.

வேதாகமம் கோழைகளை ஒருபோதும் அங்கீகரிப்பதில்லை. தேவனைப் பின்பற்றும் ஒருவன் கோழையாக இருக்கக் கூடாது. கோழைகளுக்குப் பரலோகத்தில் இடமில்லை. அவர்களுக்கு நரகம் தான். (வெளி.21:8).

இங்கே ஒரு காரியத்தை உங்கள் முன் கொண்டு வருகிறேன். கவனியுங்கள். பன்னிரண்டு சீஷர்களை இயேசு தெரிந்து கொண்டார். மூன்று ஆண்டுகள் ஊழியப் பயிற்சி தந்தார். அற்புதங்கள் செய்யும் வல்லமையைத் தந்தார். ஆனாலும் கூட, புறஜாதிகளுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க, பவுலைப் பிரத்யேகமாகத் தெரிந்து கொண்டார். ஏன்? இந்தப்பன்னிரெண்டு பேரும் புறஜாதிகளுக்கு சுவிசேஷம் அறிவிக்க முடியாதா? இயேசுவிடம் பயிற்சி பெற்ற இவர்கள் அதைச் செய்ய தகுதியற்ற வர்களா? பின்னே, ஏன் புறஜாதிகளுக்கென்று பவுலைத் தெரிந்து கொண்டார்? என்ன காரணம்? சர்வஞானம் கொண்ட தேவனுடைய இந்த தெரிந்து கொள்ளுதலுக்கு, இதுதான் காரணம் என்று நாம் குறிப்பாக எதையும் சொல்ல முடியாது. ஆயினும், நான் சொல்ல வருவதைக் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள்.

இயேசுவின் சீஷர்களில், பேதுருதான் கொஞ்சம் துடுக்கானவன். உடனுக்குடன் பதில் கொடுப்பவன் (மத்.16:16).ஓரளவு தைரியமானவன் எப்படியெனில், இயேசுவைப்பிடிக்க சேவகர்கள் வந்தபோது, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனின் காதை இந்த பேதுரு வெட்டினான். (யோவா.18:19).ஆனாலும், இயேசுவை விசாரிக்க காய்பாவின் அரண்மனைக்கு கொண்டுபோனபோது, ஒரு வேலைக்காரிக்கு பயந்து, இயேசுவை மறுதலித்தான்.(மத்.26:70) பிறகு சீஷர்கள் எல்லாருமே அவர் சிலுவையிலறையப் பட்டதற்குப் பின், மீன்பிடிக்க சென்று விட்டார்கள். (யோவா.21:3-5). மொத்தத்தில்,அவர்கள் அனைவரின் செயல்பாட்டையும் உற்றுநோக்கினால், இருக்க வேண்டிய அளவுக்கு அவர்களிடம் தைரியம் இருந்ததாகத் தெரியவில்லை.

அந்நாட்களில், ஒரு யூதன் புறஜாதிகளிடத்தில் போக்கும் வரத்துமாயிருந்து, அவர்களுடன், எல்லா வகையிலும் கலந்திருப்பது சாதாரண காரியமல்ல. அதற்கு அசாத்தியமான மனபலம் வேண்டும். இந்த வகையான மனபலம் பேதுருவுக்கு குறைவாகவே இருந்ததென்று இரண்டு காரியங்களின் மூலமாகத் தெரிகிறது. முதலாவது,அப்போஸ்தலர் 10-ம் அதிகாரத்தில் ***''தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று அவனுக்கு சொன்னபிறகும், அப்படியல்ல ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை''*** என்று சொன்னது (அப்.10:15,16).பிறகு, ஒரு சமயம் அவன் புறஜாதியாருடன் சாப்பிடுகிறான். அப்போது, யாக்கோபினிடத்தி

லிருந்துசிலர் வருகிறார்கள் என்று தெரிந்தபோது, விருத்த சேதனமுள்ளவர்களுக்குப் பயந்து, விலகிப் பிரிந்தான். (கலா.2:12). ஆக,12 பேருக்குள்ளே, துடுக்கானவனாகவும், கொஞ்சம் தைரியசாலியாகவும் இருந்த பேதுருவே, இப்படி அதைரியம் உடையவனாக இருந்ததால், ஒருவேளை, சவுல் என்பவன் தனக்கு எதிரானவனாக இருந்தாலும், அவனுடைய பிற தகுதிகளோடு தைரியமும் இருந்ததால், தேவன் இவனைத் தெரிந்திருப்பாரோ? எப்படி? இதுவும் ஒரு காரணமாக இருக்க வாய்ப்புண்டுதானே.

தேவன், தன்னைப் பின்பற்றும் பிள்ளைகள் உள்ள உறுதி உள்ளவர்களாக இருக்க வேண்டுமென்றே விரும்புகிறார். ஏனெனில், அவரைப் பின்பற்றுவதற்கு ஒருவன் பல தியாகங்களை செய்யவேண்டும். அப்படி செய்வதற்கு உள்ள உறுதியும், தைரியமும் கண்டிப்பாகத் தேவை. அது காலேபிடத்திலே இருந்தது. அந்த மனபலம், அவன் தேவனை முழுமையாகப் பின்பற்ற உதவியது. அவனுடைய முழுமையான பின்பற்றுதல், அவனை கானானுக்குள் அழைத்துச் சென்றது.

ஆகவே, அன்பானவர்களே, நாமும் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் விசுவாசத்தோடு தைரியத்தையும் சேர்த்துக்கொண்டு, அவரை முழுமையாகப் பின்பற்றினால், பரம கானானுக்குள் பிரவேசிக்கலாம்.

## III. காலேபின் பொறுமை

தேவனை முழுமையாகப் பின்பற்றின இந்தக் காலேபிடமிருந்து, நாம் கண்டுபிடிக்கக் கூடிய மூன்றாவது குணம் பொறுமை. ***"இதோ, பொறுமையாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள்"*** (யாக்.5:11) என்று யாக்கோபு ஆசிரியர் சொல்வதுபோல, நம்முடைய காலேப் பொறுமை காத்து, பாக்கியம் பெற்றான்.

காலேப், யோசுவாவுடன் சேர்ந்து, கானான் தேசத்தை வேவுபார்த்து வந்து கொடுத்த நம்பிக்கையின் செய்திக்காக, அவனுக்குத் தேவனாலும், தேவனுடைய தாசனாகிய மோசேயினாலும் இவ்விதம் வாக்கு கொடுக்கப்படுகிறது. ***".... காலேப் என்னை உத்தமமாய் பின்பற்றி வந்தபடியினால், அவன் போய்வந்த தேசத்தில் அவனைச் சேரப்பண்ணுவேன்; அவன் சந்ததியார் அதைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் என்றார்"*** (எண்.14:24). இந்த வாக்குத்தத்தம் கொடுக்கப்படும் போது, அவனுக்கு வயது 40. அப்புறம், சற்றேறக்குறைய 39 ஆண்டுகள் வனாந்திர யாத்திரை. பிறகு ஒரு ஆறு ஆண்டுகள் கானானை மேற்கொள்ளும் படியான யுத்தம்.அதன்பிறகு, சுதந்தரித்துக் கொண்ட தேசத்தை, கோத்திரங்களுக்கு பங்கிடுதல் என, மொத்தத்தில், 45 ஆண்டுகள் உருண்டோடி விட்டது. ஆனாலும், இவனுக்கு தேவனாலும், மோசேயினாலும் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேறவில்லை.

இங்கே, காலேபினுடைய சூழ்நிலையை எண்ணிப்பாருங்கள். ஒருவேளை கானானுக்குள் பிரவேசிக்காமலேயே இருந்திருந்தால் இவன் வாக்குத்தத் தத்தைப் பற்றிக் கண்டுகொள்ளமாட்டான். அப்படியே பிரவேசித்து, தேசம் கோத்திரங்க

ளுக்குப் பங்கிடப்படாமல் இருந்திருக்குமானால் இந்த வாக்குத்தத்தத்தைப்பற்றி காலேப் கவலைப்பட்டிருக்கமாட்டான். ஆனால், பிரவேசமும் நடந்து விட்டது. பங்கிடுதலும் முடிந்துவிட்டது. ஆனால், இவனுக்கு கிடைக்க வேண்டியதோ கிடைக்கவில்லை. அதுவும், அதைப் பெற்றுக்கொள்வதற்கு எல்லாத் தகுதியும் இருந்தும் கிடைக்க வில்லை. தன்னைக் காட்டிலும் வயதில் குறைந்தவர்களும், தன்னுடைய தகுதிக்குப் பக்கத்தில் கூட வரமுடியாதவர்களும், தங்கள் சுதந்திரத்தில் ஆனந்தமாய் திரியும்போது, காலேபுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் இன்னும் நிறைவேறாமலிருக்கிறது. எப்படியிருந்திருக்குமென்று எண்ணிப் பாருங்கள்.

ஒருவேளை,இந்தக் காலேப் இருந்தயிடத்தில், நாம் இருந்திருந்தால் எப்படி செயல்பட்டிருப்போம்? தேவன் தனது வாக்கை மீறிவிட்டார் என்று எண்ணியிருப்போம் அல்லது மோசே தன்னை ஏமாற்றிவிட்டான் என்று நினைத்திருப்போம், அல்லது யோசுவா தன்னை வஞ்சித்துவிட்டான் என்று குமுறியிப்போம். ஆனால் இந்த காலேபோ, அப்படியெல்லாம் செய்யாமல், யோசுவாவினிடத்தில் வந்து, பழையவைகளை நினைவுப்படுத்தி, எனக்குச் சுதந்திரம்தாரும் என்று பணிவாய் கேட்கிறான். (யோசுவா. 14:6-12). பிறகு யோசுவா ***"காலேபை ஆசீர்வதித்து, எபிரோனை அவனுக்குச் சுதந்திரமாகக் கொடுத்தான்"*** (எண்.14:6) எபிரோன்,அவனுக்குச் சுதந்திரமாயிற்று. தனது 85 வது பிறந்த நாளில், பிறந்தநாள் பரிசாக இந்த ஆசீர்வாதத்தை அவன் பெற்றுக்கொண்டான்.

கர்த்தருக்குள் அருமையான தேவனுடைய பிள்ளைகளே! வருடத்தின் இறுதியில் நின்று கொண்டிருக்கிற நீங்கள் ஒருவேளை இந்த ஆண்டு எப்படியோ கழியட்டும், வருகின்ற புத்தாண்டில் நான் கர்த்தருக்குப் பிரியமாக வாழ்வேன் என்று யோசித்துக் கொண்டிருக்கக் கூடும். அல்லது, இந்த ஆண்டைக் காட்டிலும், நான் தேவனுக்கு இன்னும் உகந்தவனாக வாழவேண்டும், அதற்கு என்ன செய்யலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கக்கூடும். தேவன் நம் ஒவ்வொருவருக்காகவுமே வருடத்தின் இறுதியில், உத்தமமாய்த் தன்னைப் பின்பற்றின, ஆம், முழுமையாகத் தன்னைப் பின்பற்றின காலேபை, நம்முன் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்.

ஆகையால், நாம் ஒவ்வொருவரும்,எதிர்வரும் புதிய ஆண்டில், தேவனை உத்தமமுமாகவும், அதாவது முழுமையாகவும் பின்பற்ற காலேபின் குணங்களைப் பெற்றுக் கொள்வோம். ஆம், காலேப்பைப்போல, விசுவாசத்தோடும், தைரியத்தோடும், பொறுமையோடும் தேவனைப் பின்பற்றுவோம்.காலேப் கானானுக்குள் பிரவேசித்து தனக்கு சுதந்திரம் பெற்றுக்கொண்டதுபோல், நாமும் பரம கானானுக்குள் பிரவேசித்து, நமக்குரிய வாசஸ்தலத்தைப் பெற்றுக்கொள்வோம்!

**தேவன் தாமே எதிர்வரும் புத்தாண்டில் உங்களைக் காத்து**

**வழிநடத்துவாராக! ஆமென்!**

அனைவருக்கும் அடியேனின் குடும்பத்தின் சார்பாக
புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.

செ. ராஜநாயகம்

# வாரத்தின் முதல்நாள்

வாரத்தில் ஏழு நாட்கள் உள்ளன. இதில் எந்த நாளிலே கிறிஸ்தவன் தேவனை ஆராதிக்க வேண்டும்? ஆராதனைக்கென்று குறிப்பிட்ட நாள் ஒதுக்கப்பட்டிருக்கிறதா? வேதம் இதுக் குறித்துக் கூறுவது என்ன?

யூதர்களின் ஆராதனை தினம் ஓய்வுநாள் என்று நம் எல்லாருக்கும் தெரியும். இஸ்லாமிய மதத்தினர் வெள்ளிக்கிழமையைத் தங்கள் தொழுகை நாளாக கொண்டுள் ளனர். ஆனால், கிறிஸ்தவர்களைப் பற்றி என்ன?அவர்கள் எந்த நாளிலே ஆராதிக்கிறார்கள் என்பது அவசியந்தானா? பழைய ஏற்பாட்டின்படியான ஆராதனைத் தினமாகிய ஓய்வுநாள் கட்டளை இன்னும் நம்மை கட்டுப்படுத்துகிறது என்று வாதிடுவோரும் நம் மத்தியில் உள்ளனர். ஆகிலும் அக்கட்டளை யூதர்களுக்கு மாத்திரமே கொடுக்கப்பட்டது. (யாத்.20:1-17) நாம் வாழும் வாழ்க்கை அதிலிருந்து வித்தியாசப்பட்டதாகும்.(யோவான்.1:17) மேலும் அந்த (பழைய) பிரமாணம் நிறைவேற்றப்பட்டு நம்மிடத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டது (மத்.5:17-19). கிறிஸ்து ஓய்வு நாள் பிரமாணத்தை கைக்கொண்டிருந்து, அந்த மோசேயின் பிரமாணத்தின் கீழேயே வாழ்ந்து மரித்தார். ஆனால், ஒரு தடவையாகிலும் கிறிஸ்து அதை அவருக்கு பின் வருபவர்கள் கைக்கொள்ள வேண்டுமென கட்டளை யிடவில்லை என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். அப்போஸ்தலர்கள் ஓய்வு நாளை கைக்கொள்ள வுமில்லை, கட்டளையிடவுமில்லை. பவுல் ஓய்வு நாட்களில் அடிக்கடி ஜெப ஆலயத்திற்குச் சென்றார். ஆகிலும் ஒரு முறை கூட தொழுது கொள்ளும்படி அவர் அப்படிப் போகவில்லை. அப்படியானால் அவர் எதற்காகப் போனார்? தேவனுடைய வசனத்தை போதிக்கவே.அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தை நீங்கள் வாசிப்பீர்களேயானால், அவர் தேவாலயத்திற்கு சென்ற உண்மை நோக்கத்தை ஒருமுறை யூதர்கள் அறிந்த போது, அவரை ஜெப ஆலயத்திற்கு வரவேற்கவில்லை, மாறாக எதிர்த்து நின்றனர்.

கத்தோலிக்க சபையால் தான் ஆராதனை தினம் மாற்றப்பட்டது என்போரும் உண்டு. கத்தோலிக்கர்கள் தாங்களே உலகிற்கு வேதத்தைக் கொடுத்ததாக உரிமை கொண்டாடுகின்றனர். இந்த இரண்டுமே தவறான கருத்து. பழைய ஏற்பாட்டின் கீழ் வாழ்ந்தோர்கள் ஓய்வு நாளைக் கைக்கொண்டனர் என்று வேதாகமம் போதிக்கவோ காட்டவோ இல்லை. வரலாறும் இதைக் கூறுவதில்லை. நாம் வேதத்தை முறையாக பகுத்து படிப்போமேயாகில் (2தீமோ.2:15) மோசேயின் பிரமாணத்திற்கும், கிறிஸ்துவின் பிரமாணத்திற்கும் வித்தியாசத்தைக் காண்போம். மோசேயின் பிரமாணம் அழிக்கப்பட்டது என்பதையும் காண்போம். அதுபோலவே ஓய்வுநாளும் அழிக்கப்பட்டது என்பதையும் (2.கொரி.3:6-16), கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் ஆராதனைக்கென்று, ஒரு புதிய தினம் கொடுக்கப்பட்டது

என்பதையும், அதுவே வாரத்தின் முதல் நாள் என்பதையும் நாம் கண்டறிவோம். அப்போஸ்தலர் 15:13-20 ஐ வாசிப்போமானால், கிறிஸ்தவர்கள் ஓய்வுநாள் பிரமாணத்திலிருந்தும்,மோசேயினால் கொடுக்கப்பட்ட பிற பிரமாணத்திலிருந்தும் பரிசுத்த ஆவியால் விடுதலையாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறியலாம்.

நீங்கள் வசன ஆதாரமற்ற வேறே அநேக காரியங்களுக்கு கடந்து செல்வதற்கு முன் இப்பொழுது வாரத்தின் முதல் நாளைக் குறித்து சில காரியங்களை நான் குறிப்பிடட்டும், முதலாவதாக, வாரத்தின் முதல் நாள் கிறிஸ்தவர்களின் ஓய்வு நாளல்ல. இந்நாள் ஓய்ந்திருக்கவோ, ஆசரிக்கவோ, கைக்கொள்ளவோ கூடியதல்ல. இது ஒரு புனித நாளுமல்ல. அப்படியானால் இது என்ன நாள்? கிறிஸ்தவர்கள் ஒன்றாகக்கூடி ஆராதனை செய்யும்படியாக கர்த்தர் ஏற்படுத்தின நாள் தான் வாரத்தின் முதல் நாள் வேறு எவ்வகையிலும் இது பழைய ஏற்பாட்டின் ஓய்வு நாளை அடையாளப்படுத்தக் கூடியதல்ல. வாரத்தின் முதல் நாளைக் குறித்து வசனம் போதிப்பது என்ன? தயவுசெய்து கவனியுங்கள்.

1). கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிரோடு எழுந்த நாள் வாரத்தின் முதல்நாள் (மத்.21:1-7) அவர் உயிர்த்தெழுந்த பின் தமது சீஷர்களுக்கு தரிசனம் கொடுத்த இரண்டு முறையும், வாரத்தின் முதல் நாளிலேதான்.(யோவான்.20:1,19,26).

2). பரிசுத்த ஆவியானவர் வாரத்தின் முதல் நாளில் தான் ஊற்றப்பட்டார் (அப்.2:1-4) நமக்கு இது எப்படித் தெரியும்? ஏனெனில் பெந்தெகொஸ்தே நாள் எப்பொழுதுமே வாரத்தின் முதல் நாளில் தான் வரும்.

3). சுவிசேஷம் வாரத்தின் முதல் நாளிலே தான் பிரசங்கிக்கப்பட்டது. (அப்.2:38-47)

4). சபை வாரத்தின் முதல் நாளிலே ஸ்தாபிக்கப்பட்டது.(அப்.2:38-47)

5). சீஷர்கள் அப்பம் பிட்கும்படி வாரத்தின் முதல் நாளிலே கூடி வந்தார்கள், *வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறு நாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடு ராத்திரி மட்டும் பிரசங்கித்தான்* (அப்.20:7) ஓய்வுநாள், ஆராதனை தினமாக இன்று இருக்குமேயாகில், பவுல் அவ்வளவு நாட்களையும்,''ஓய்வு நாளையும்'' கூட கடந்து சீஷர்களுடன் ஏன் தரித்திருக்க வேண்டும்? நிச்சயமாகவேஇது உங்களுக்கு விளங்கும்.

6). கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல்நாளிலே எதையாகிலும் சேர்த்துவைத்துக் கொடுக்கும்படி கட்டளையிடப்பட்டனர். ***''நான் வந்திருக்கும்போது பணஞ் சேர்க்குதல் இராதபடிக்கு உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள் தோறும் தன் தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன்''*** (1.கொரி.16:1,2). தான் அங்கு செல்லும்போது பணம் சேர்க்காமல், சபை பொதுவாகக் கூடி வருகிற நாளில் காணிக்கை, செலுத்தி சேர்த்து வைத்திருக்க வேண்டியதை இங்கு பவுல் குறிப்பிடுகின்றார். காணிக்கை வீட்டிலே சேகரித்து வைப்பதை, இங்கு குறிக்குமானால், அவர் வந்திருக்கும்போது

பணத்தை சேர்க்குதல் (ஒன்று திரட்டுதல்) அவசியமானதாகிவிடும். ஓய்வுநாள் ஆராதனை தினமாக இருப்பின், பவுல் கிறிஸ்தவர்களை வாரத்தின் முதல் நாளிலே கூடி வந்து காணிக்கை அளிப்பதைக் குறித்து ஏன் பேசுகிறார்? ஓய்வு நாளை கைக்கொள்ளும் கூட்டத்தார் பவுல் சொல்லும் இக்காரியத்தை செயல்படுத்து கிறார்களா? இல்லையெனில், ஏன் அப்படிச் செய்வதில்லை?

7. நாளானது சமீபித்து வருவதால், கிறிஸ்தவர்கள் சபை கூடி வருதலை விட்டு விடக்கூடாது(எபி.10:25).அப்படி கூடி வரவேண்டிய நாள் வாரத்தின் முதல் நாள். யோவான் இதைக் கர்த்தருடைய நாள் என்று குறிப்பிட்டார். (வெளி.1:10)இது ஆராதனை தினம். கர்த்தருக்கு கடைசி நாளையல்ல, வாரத்தின் முதல் நாளைக் கொடுப்பது அவசியமானது.(மத்.6:33)

பழைய பிரமாணத்தையே இன்றும் பின்பற்ற விரும்புவோர், ரோமர் 7:1-7; 2.கொரி.3; எபே.2; கொலோ.3:7-10 ஆகியவற்றை வாசித்து அறிதல் நன்று. மோசேயினால் கொடுக்கப்பட்ட பிரமாணத்திற்கல்ல, கிறிஸ்துவால் கொடுக்கப் பட்ட பிரமாணத்திற்கே நாம் செவி சாய்க்க வேண்டும் என்பதை நாம் அறிய வேண்டும். எனவே அவருடைய பிரமாணம் பேசுகின்ற நாளிலே நாம் ஆராதனை செய்வோம். இதைவிட குறைவானதை கர்த்தர் ஏற்றுக் கொள்ளவேமாட்டார்.

**J.C.Choate** **J.C. சோட்**

## ஏழு வித ஞானஸ்நானம்

1. **யோவான் ஸ்நானன் கொடுத்த ஞானஸ்நானம். (மத்.3:1-6)**
2. **இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானம். (மாற்கு 16:16)**
3. **பாடுகளின் ஞானஸ்நானம். (லூக்கா 12:50)**
4. **மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் .(1.கொரி.10:2)**
5. **பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம். (மத்தேயு 3:11)**
6. **அக்கினி ஞானஸ்நானம். (மத்தேயு 3:11)**
7. **பேழையிலே நோவா காக்கப்பட்டதின் ஞானஸ்நானம். (1.பேதுரு.3:21)**

**முதல் நூற்றாண்டுக்குப் பின், நடைமுறையில் இருப்பது,**

**இயேசு கிறிஸ்துவின் ஒரே ஞானஸ்நானம் . (எபேசியர் 4:4)**

பெண்கள் பகுதி

# வீழ்ச்சியிலும் மாறாத தேவனுடைய திட்டம்

சிருஷ்டிப்பு முதற்கொண்டே ஆண் தன் குடும்பத்திற்கு தலைவனாக இருக்கவேண்டும் என்பதில் தேவன் மிகவும் திட்டமாயிருந்தார். இருந்த போதிலும் பெண்ணினால் உண்டான மீறுதலினிமித்தம் புதிய நிபந்தனைகளும், சட்டங்களும் ஏற்படுத்தப்பட்டது.

விலக்கப்பட்ட கனியை ஏவாளும், ஆதாமும் புசித்த பிறகு, பாவம் செய்து விட்டதாக உணர்ந்தார்கள். முதல் முறையாக தேவனைக் கண்டு பயந்தார்கள். ''பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள்.அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள்.அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு; நீ எங்கே இருக்கிறாய் என்றார். அதற்கு அவன்; நான் தேவரீருடைய சத்தத்தை தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணி யாயிருப்பதினால் பயந்து, ஒளித்துக் கொண்டேன் என்றான்.அப்பொழுது அவர்; நீ நிர்வாணி உனக்கு என்று யார்? புசிக்க உனக்கு வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார்.

அதற்கு ஆதாம்: என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள். நான் புசித்தேன் என்றான். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி; நீ இப்படிச் செய்தது என்ன என்றார்''. (ஆதி.3:8-13) இந்த துக்கமான சோதனை நிகழ்ச்சியில் ஏவாள் தன் குடும்பத்திற்கான தலைமையை, தான் எடுத்துக்கொண்டாள். அவள் அவ்வாறு செய்வ தற்கு ஆதாம் அனுமதித்து விட்டான்.ஆனால் தேவன் அந்த இடத்திற்கு வந்த போது அவர்கள் ஏற்படுத்திய அந்த தலைமைத்துவத்தின் மாறுதலுக்கு உடன் பட்டாரா?இல்லை. தேவன் ஆதாமைக் கூப்பிட்டார். பாவம் நிகழ்ந்தது பற்றி தேவ னுக்குத் தெரியுமா? மேலும் யார் இந்த மீறுதல் செயலைச் செய்ய வழிகாட்டியது என்பதும் தேவனுக்குத் தெரியுமா? தேவன் எல்லாவற்றையும் அறிந்தே இருந்தார்.ஆனால், ஆதாமை குடும் பத்தின் தலைவனாக,அதின் நேர்த்தியான தலைமைத்துவத்தின் பொறுப்புடன் உண்டாக்கியிருந்தபடியால், நடந்த காரியத்திற்கு பதில் அளிக்கும்படி தேவன் அவனையே அழைத்தார் அங்கே ஏவாளை அழைக்கவில்லை. தேவனுடைய ஒழுங்கு மீறப்பட்ட இந்தமுதல் சம்பவத் திலிருந்து நாம் ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்வது அவசியமாகிறது. மனிதன் தன்னு டைய பங்கிலே காரியங்களை எப்படிச் செய்தாலும், தேவன் தாம் ஏற்படுத்திய ஒரு திட்டத்தை தானே மாற்றியதில்லை,மாற்றவுமாட்டார்.

அவர்கள் செய்த பாவத்தின் விளைவாக புதிய கட்டளைகளும், தண்டனைகளும் சர்ப்பத்திடமும், குறிப்பாக பெண்ணிடமும், ஆதாமிடமும் பேசப்பட்டது. விசேஷமாக பெண்ணிடம் பேசப்பட்டதை நாம் அறிய ஆவலாயிருப்போம். அது என்னவென்றால் *'' அவர் ஸ்திரீயை நோக்கி; நீ கர்ப்பவதியாய் இருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்; உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும்.அவன் உன்னை ஆண்டு கொள்ளுவான் என்றார்''* (ஆதி.3:16)

பாவத்தின் விளைவாக துக்கமும், வேதனையும் இந்த உலகிற்கு கொண்டுவரப்பட்டது. மானிட இனத்தில் சரிபாதி இருக்கும் பெண் என்பவள் அதிக உணர்ச்சி உள்ளவளாகவும், மனவெழுச்சியுள்ளவளாகவும் இருப்பதால் இந்த சம்பவத்தில் அதிக சுமையை ஏற்க வேண்டியதாயிற்று.அவளுடைய கர்ப்பத்தின் வேதனை அதிகரிக்கப்பட்டது. பிள்ளை பெறும்போதும், வேதனையை உண்டாக்கிவிட்டார்.அத்தோடு மட்டுமல்லாமல் தன் கணவனுடைய அதிகாரத் திற்கு உட்பட்டவளாக தள்ளப்படுகிறாள். அவள் ஆசை அவள் புருஷனைப் பற்றியிருக்கும். அவன் அவளை ஆண்டு கொள்ளுவான்.

மேலும், ஒரு கிறிஸ்தவ கணவனுக்கும், மனைவிக்கும் வேண்டிய ஆலோசனைகளை 1.பேதுரு 3:1-7 வசனங்களில் வாசிக்கிறோம். அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்க ளாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள். மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது. இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித் தார்கள். அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி ,அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்; நீங்கள் நன்மைசெய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்கு பிள்ளைகளாயிருப்பீர்கள்.

அந்தப்படியே புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்ட மாயிருக்கிற படியினால் உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனே கூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள்.

தேவனுடைய அதிகாரம் நிறைந்த கட்டளைகள் பற்றியும், குடும்பத்திற்கு தலையாக புருஷரை ஏற்படுத்தியது பற்றியும், முழுக்குடும்பத்திற்கும் வழிகாட்டியாக ஆண் இருப்பதுபற்றியும் இந்த வசனங்கள் நமக்கு விளக்கிச் சொல்லுகிறது.கிறிஸ்தவப் பெண்கள் தங்கள் கணவனுக்கு அடங்கியிருக்க வேண்டும் என்று கட்டளையாகக் கூறப்படுகிறது. புருஷர்கள் தங்கள் மனைவிகளை அன்போடும், புரிந்து கொள்ளுதலோடும் நடத்திச் செல்லவேண்டும். ஆனால், ஒருவேளை ஒருமனைவி தன் கணவனைவிட அதிக புத்திசாலியாக இருந்தால் அல்லது அவள் அவனைவிட சிறந்த வழிநடத்தும் தகுதிபடைத்தவளாய் இருந்தால் அவள் தலைமைப்பதவியை ஏற்றுக்கொள்ளலாமா? இல்லை. தேவன் தாமே ஏற்படுத்திய அந்த ஒழுங்குக்கு மாறாக செயல்பட எந்த ஒரு ஆணுக்கும், பெண்ணுக்கும் அதிகாரங்கொடுக்கவில்லை.

தேவன் விதித்திருக்கிற இந்த அதிகாரமுள்ள கட்டளையை உணர்ந்து ஆண்களும், பெண்களும் தங்களுடைய துணையை தேர்ந்தெடுப்பதில் மிகவும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். ஒரு சாமர்த்தியமான பெண், பலவீனமான ஆணை திருமணம் செய்ய நேரிடும்போது அவளுடைய பொறுப்பெல்லாம், ஓர் ''உதவிக்காரியாய்'', ''ஏற்ற துணையாய்'' அவன் தலைமையேற்றுச் செல்லும் விதத்தில் அவனுக்கு தைரியமூட்டுபவளாக இருக்க வேண்டுமேயொழிய அவனுக்கு மேலாக அதிகாரம் செலுத்தி அவனை இன்னும் பலவீனப்படுத்திவிடக் கூடாது.

இந்த வசனங்களில் காணும் அதிகாரங்கள் வெறுமனே கணவனும், மனைவியும் எடுக்க வேண்டிய தீர்மானங்கள் மட்டுமல்ல. கீழ்வரும் சில காரியங்களையும் நாம் மனதில் கொள்ளவேண்டும்.

1). ஒரு பெண்ணின் சாந்தமும், அமைதலுமுள்ள ஆவி ***தேவனுடைய பார்வையிலே மிகவும் விலையேறப்பட்டதாயிருக்கிறது.***

2. ஜெபங்கள் தடைபடாமல் இருக்க கணவனும், மனைவியும் நியாயமான உறவுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

3. கணவன், மனைவி ஆகிய இருவரின் உறவுகள், தங்கள் நியாயத்தின்படியும், கருத்தின்படியும் மாத்திரம் தங்கள் இருவருக்குள்ளும் இருந்துவிடக்கூடாது. மாறாக அவர்கள் இருவருக்குள்ளும் இருக்கும் உறவு தேவனுக்கு கீழ்ப்படிதல் மூலமாக அவருக்குள் இருக்கவேண்டும்.

4. எந்த ஒரு காரியத்திலும் நாம் தேவனைத் தள்ளிவிட்டு, அவருக்கு பிரியமாய் இருக்க முடியாது.

தேவனால் ஏற்படுத்தப்பட்ட இந்த அதிகாரத்தின் ஒழுங்குபற்றி முடிவாக, தெளிவான வாக்கியம் 1.கொரிந்தியர் 11:3- ம் வசனத்தில் பவுலால் கூறப்படுகிறது. '' ***ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறாரென்றும் நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறேன்.***

# ரூத் ஒரு கண்ணோட்டம்

1. **பொருள்** : ரூத் என்ற பெயருக்கு "ரோஜாமலர்" என்று பொருள்

2. **காலம்** : ஏறக்குறைய கி.மு.1100

3. **ஆசிரியர்** : சாமுவேல் என்று பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**4. இந்நூல் பற்றி** :

அ) இந்நூல் ஓர் எபிரேய மனிதனால் எழுதப்பட்டபோதிலும், பொதுவாக புறஜாதிகளின் மீது, எபிரேயர்களுக்கு இருந்த பகைமையின் நிழல் கூட இந்நூலில் காணப்படவில்லை.

ஆ) இப்புத்தகத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் நியாயாதிபதிகளின் காலத்தில் நடந்தது என்று நம்பப்படுகிறது.

இ) மத்தேயு சுவிசேஷ நூலில், இயேசுவின் வம்சவரலாற்றுப் பட்டியலில் இடம்பெற்றுள்ள ஒரே புறஜாதிப்பெண்; "ரூத்" (மத்.5:1)

ஈ) 1. இந்நூல் தாவீதின் காலத்தில் எழுதப்பட்டது.

2. தாவீதின் குணாதிசயங்களை கொண்டதாகவும் இருக்கிறது.

3. கலப்பில்லாத, சுத்த எபிரேயனாகிய தாவீது, புறஜாதி மக்களுக்கு எதிராய்ஒரு எபிரேயனுக்கு எப்பொழுதுமே இருந்த அடிப்படை பகைமை உணர்வு இல்லாதவனாயிருந்தான். (தன் தந்தையையும், தாயையும் மோவாபிய ராஜாவினிடத்தில், பாதுகாப்பிற்காக ஒப்படைத்தான்இந்த தாவீது).

**5. இந்நூலின் நோக்கம்**

1.) யெகோவா தேவன், தேசப் பாகுபாடின்றி தம்மீது விசுவாசம் வைத்து கீழ்ப்படிகிறவர்களை ஏற்றுக்கொள்கிறார் என்பதை உணர்த்துவதற்காக.

2). கிறிஸ்துவே உண்மையான சுதந்திரவாளி என்று நாம் அறிந்துகொள்ளும்படியாக.



# உங்களையும் அழைக்கிறார்

பராக்கிரமத்தையும், பகுத்தறிவையும் பரமதேவனால் பரிசாகப் பெற்ற வாலிபர்களாகிய நம்மை, காலமும் காட்சியும் மாறிடினும், மாறாத மகிமையின் தேவன், பாவம் என்கிற படுகுழியிலிருந்து பரிசுத்தம் என்கிற பாதுகாப்பான பர்வதத்திற்கும், அநீதி நிறைந்த அகிலத்திலிருந்து, நீதி நிறைந்த நித்தியத்திற்கும், அந்தகார இருளிலிருந்து, ஆச்சர்யமான ஒளியினிடத்திற்கும், வஞ்சிக்கும் பொய்யினிடத்திலிருந்து வாழ்வளிக்கும் மெய்யினிடத் திற்கும்,பாதகப் பிசாசின் ராஜ்யத்திலிருந்து தன் பாசமுள்ள புதல்வனின் ராஜ்யத்திற்கும், மாறும்படி அழைக்கிறார்.

அவனியில் தன் குழந்தையைப் பெற்றெடுத்த அன்னை அதற்கு அமிழ்தூட்ட ஆவலாய் அழைப்பது போல், தரணியின் மண்ணைக்கொண்டு மாந்தரை சிருஷ்டித்து, தேவ பக்தியுள்ள சந்ததியைத் தமக்கெனப்பெற்றிட சித்தம் கொண்ட தேவன், மானுடம் தன் பாசத்தை உணராமல் பசாசின் வேஷத்தில் மயங்கி பாவமெனும் மாசு படிந்து, மரணமெனும் வெகுமதியை பெற்றுக்கொண்ட போதிலும் தன் சிருஷ்டி சீர் கெட்டுப் போய்விடக்கூடாதென்பதற்காக நித்திய ஜீவனெனும் அமிழ்தூட்ட, ஒருதாய் அழைப்பதைப் போல் கரிசனையாய் இருகரம் நீட்டி அன்பாய் அழைக்கிறார். *'' நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்...''* (1.யோவான் 3:1).

## I தேவனின் மகத்துவத்தைக் கண்டான் - தன்னை உணர்ந்தான்

லீபனோன் வனம் என்னும் மாளிகையைக் கட்டி செழுமையின் சிங்காசனத்தில் கெம்பீரமாய் வீற்றரசாண்ட சாலொமோனின் காலத்திற்குப் பின்பு ஐக்கிய இஸ்ரவேல், இருபுறமும் பிளந்து நீர்மதிலாய் நின்ற செங்கடலைப்போல் பிளவடைந்தது. வடக்கு ராஜ்யத்தால் துன்மார்க்கம் துவக்கப்பட்டு, அது யூதாவையும் பின் நாட்களில் புற்றுநோய் போல் தொற்றிக்கொண்டது. தேவனை மறந்து தீவிரித்து வரும் பகைவரின் சேனைக்குள் பாய்ந்து செல்லும் பலமிகு குதிரைபோல், மாய்ந்துபோவோம் என அறியாமல் பாவத்திற்குள் படுபயங்கரமாய் பாய்ந்தோடினார்கள் பேதையுள்ள புறாவான இஸ்ரவேல் ஜனங்கள்.

அந்நிய தேவர்களை பின்பற்றியதால் இஸ்ரவேலர்கள், அடிமைத்தன சங்கிலிகளை சர்வவல்லவரின் சந்நிதானத்திலிருந்து சவதரித்துக் கொள்வார்கள் என எச்சரிக்க, அவர் தீர்க்கதரிசிகளை தெரிந்துகொண்டார். இப்படி எச்சரிப்பின் எக்காளம் முழங்கிய தேவன் சீர்கெட்ட பிள்ளைகளான இஸ்ரவேலையும் யூதாவையும், '' திருந்தி வா! திரும்ப வா!!'' என அழைப்பதற்காகவும் தீர்க்கதரிசிகளை அழைத்தார். இதைப்போன்றதொரு அழைப்பை ஆமோத்சின் புதல்வனாகிய ஏசாயா பெற்றுக்கொண்டான்.(ஏசாயா.6:1)

சர்வத்திற்கும் மேலான தேவன், தனக்கு எள்ளளவும் சமமில்லாத மனிதகுலத்தில் ஒருவனாக இருந்த ஏசாயாவிற்கு உசியா ராஜா ஜீவித்துப்போன வருடத்தில் தரிசனமானார். *"...ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கக் கண்டேன்"* (ஏசாயா 6:1) பழைய ஏற்பாட்டுப் பவுல் என்று அழைக்கப்படும் ஏசாயா, பூர்வம் முதல் உறுதியானதும், தலைமுறை தலைமுறையாக நிலை நிற்கிறதும், வானங்களில் ஸ்தாபிக்கப் பட்டது மான சிங்காசனத்தை தன் தரிசனத்தில் கண்டான். இங்கு தூய ஆவியானவர் அது*"உயரமும் உன்னதமுமானது"* என்ற விசேஷ வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்.

வாலிபர்களே! நமது தேவன் வானத்திலும் பூமியிலும், பூமியின் கீழ் உள்ள அனைத்திலும் *உயரமும், உன்னதமுமானவர்* என்பதை ஏசாயா தீர்க்கன் கண்டுணர்ந்தது போல நாமும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். அவர் மகத்துவமுள்ளவர், சர்வ வல்லமையுள்ளவர், நீதிபரர், பரிசுத்தமானவர், நித்தியமானவர், சர்வ வியாபி, என்று அவரின் "உயரமும் உன்னதமுமான" குணாதிசயங்கள் சொல்லி முடியாதவை. இளைஞர்களாகிய நாம் நம்முடைய தேவனின் மகிமை உணர்ந்தவர்களாக இருந்திடல் வேண்டும்.

ஏசாயா தான்கண்ட தரிசனத்தில் சேராபீன்கள், தேவனை "பரிசுத்தர்"என்று முழங்கும் சத்தத்தைக் கேட்டான் (ஏசாயா6:3) அவர் பரிசுத்தர் என கண்டமாத்திரத்தில் அவன் தன்னை உணர்ந்தவனாய் உரத்த சத்தமிட்டு ***"ஐயோ அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன்"*** என்று கூறினான். வாலிபர்களாகிய நாமும் ஏசாயாவைப்போல் அவரின் பரிசுத்தத்தை அறிந்து நம்முடைய நீதி அழுக்கான கந்தல் என உணர்ந்து அவருக்குப் பயந்து நம்மை நாமே தாழ்த்த வேண்டியது அவசியம். ஞானியின் கூற்றைக் கவனியுங்கள், ***"தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம்"*** (நீதி.22:4)

வாலிபர்களே! தேவன் மகா மேன்மையுள்ளவர் அல்லவா! நாம் பாவிகளாயிற்றே, நம்மை அவர் எண்ணிப்பார்ப்பாரா? என்று ஐயம் கொள்ள வேண்டா!அநேகருக்கு ஆறுதல் தரும் சங்கீதம் நமக்கும் பதில் தருகிறதைப் பாருங்கள். ***"கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும், தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார்..."*** (சங்.138:6) இளமைப் பருவத்தில் இருப்போரே உணர்வீர், உன்னதமானவராயிருந்தும் நாம் பாவிகளாயிருக்கையில், கடுகின் நுனியளவும் பாவமில்லாத கிறிஸ்து நமக்காக சிலுவை மரத்தில் தொங்கி, பாவமாக்கப் பட்டவராய், பாதகன் போல் மரித்தார். அவர் நம்மீது நோக்கமாயிராமல், பாசம் வைக்காமல் இப்படி கோரப்பாடுகளை படுவாரா? ஏசாயாவை தரிசனத்தின் மூலம் அழைத்த மகத்துவமுள்ள தேவன், உங்களை தம்முடைய குமாரனின் சுவிசேஷத்தின் மூலம் அழைக்கிறார். வாலிபனே! இதை சிந்தித்தபின் உணர்ந்து, உன்னை ஒப்பில்லாத திருமைந்தனுக்கு ஒப்புக்கொடு.

## II தேவையிலிருக்கும் புவியைக் கண்டான் - தன்னைக் கொடுத்தான்

பட்சிக்கிற அக்கினியாகவும், மகத்துவமும் பயங்கரமாகவும் இருக்கிற தேவனின் தரிசனத்தை ஏசாயா காண்கையில் தன் நிலை உணர்ந்தவனாய், ***"நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன்"*** என்று விளம்பினான். சேராபீன்களில் ஒருவன் பலிபீடத்திலிருந்து ஒரு குறட்டால், நெருப்புத்தழலை எடுத்து ஏசாயாவின் உதட்டைத் தொட்டபின் ***" உன் உதடுகளைத் தொட்டதினால் உன் அக்கிரமம் நீங்கி, உன் பாவம் நிவிர்த்தியானது"*** என்றான்.(ஏசாயா 6:6.7)

மனித குலத்திற்கு விமோச்சனத்தை தன் தியாக மரணத்தால் வழங்கிட வந்த விண்ணவர் இயேசு, தன்னுடைய மலைப் பிரசங்கத்தில், ***"ஆவியில் எளிமையுள்ள வர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது"*** (மத்.5:3) என்று திருவாய் மொழிந்தார்.ஏசாயா ஆவியில் எளிமையுள்ளவனாய் ***" அதமானேன் நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன்"*** என இயம்பினபோது அக்கினியால் அவன் அக்கிரமத்தை நீக்கினார். அளப்பில்லா அநந்த ஞானம் கொண்ட அநாதி தேவன். தேவனோடு தொடர்புகொள்ள ஏசாயாவிற்கு இருந்த இந்த தடை நீக்கப்பட்ட பின், ***" யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய் போவான்"*** என்ற கர்த்தரின் சத்தத்தைக் கேட்டான்.

இஸ்ரவேல் ஜனங்களின் ஆவிக்குரிய நிலை சீர்கெட்டுப்போனதால் தங்கள் பரிசுத்தருக்கு கோபமுண்டாக்கினார்கள், விக்கிரகத்தை விரும்பி விவேகமற்ற வர்களாக சேவை செய்து விக்கினம் விளைவித்தனர்.இவர்களின் இந்த இழிநிலை இடிக்கப்பட்டு தேவனோடு இழந்த இசைவை மீண்டும் பெற்றிட ஒரு நல்ல தலைவன் தேவைப்பட்டதை கண்ட ஏசாயா, தன் ஜனம் தருக்கர் கையில் அகப்பட்டு தரிகெட்டு, சிதறுண்டு போகாமல் இருக்க தான்ஒரு கருவியாக பயன்படவேண்டும் என்ற நல் எண்ணம் கொண்டவனாய், ஆண்டவரின் சத்தத்திற்கு மறுமொழியாக ***" இதோ அடியேன் என்னை அனுப்பும்"*** என்றான். (ஏசாயா 6:8)

வாலிபர்களே! தேவனின் பரிசுத்தத்திற்கு முன்பு தன்னை பாவி என்று உணர்ந்து அக்கினியால் அக்கிரமம் நீங்கப்பட்டபின், ஆவிக்குரிய வாழ்வில் தன் சகோதரர்களின் மறுமலர்ச்சிக்காக தன்னைக் கொடுத்தான் இந்த ஏசாயா என்பதை அறிந்து, வல்லமையும் பயங்கரமுமான தேவன் முன் நாம் பாவிகள் என உணர்ந்து, இருதயத்தை கொழுந்துவிட்டு எரியச் செய்யும் அவருடைய வார்த்தைகளை க் கேட்டு,பாவமன்னிப்பிற்காக திருமுழுக்குப் பெற்றபின் நானிலம் முழுவதும் நரகத்தின் நாசப்பாதையில் போகிறவர்களை, சுவிசேஷப் பாதையாகிய பரலோகப்பாதைக்கு திருப்பிட ***" இதோ உம்முடைய சத்தம் கேட்ட நான் உம் சித்தம் செய்ய என்னை தத்தம் செய்துவருகிறேன்"*** என்றுசொல்லி, நமக்காக பாரச்சிலுவையை சுமந்த ஆண்டவரின் சுவிசேஷத்தை நம்முடைய தேகங்களில் நமது தேசத்திற்காக சுமந்து செல்லுவோம்.

வாலிபர்களாகிய உங்களுடைய உயர்ந்த உள்ளத்தில், நானோ சிறுபையன் அடியேன் சென்று சுவிசேஷப்பணிசெய்தால் யார் செவிமடுப்பார்கள்? உலகம் அறியாதவன் இவன், அனுபவமில்லாத சிறுவன், கத்துக்குட்டி என்றெல்லாம் ஏளனம் பேசுவார்களே! என்ற ஐயம் எழும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஏகசக்கராதிபதியாகிய யெகோவா தேவன் ஏசாயாவை போன்ற மற்றொரு தீர்க்கனான எரேமியாவை ஏற்றமிகு பணியான தீர்க்கதரிசன பணியை ஏற்கும்படி அழைத்தபோது அவனும் ***"நான் பேச அறியேன் சிறுபிள்ளையாயிருக்கிறேன்"*** என்று மன அச்சத்தை வெளிப்படுத்தினான். ஆனால் பரலோகத்தின் தேவன் என்ன பதிலை பகர்கிறார் பாருங்கள், ***" நீ பயப்பட வேண்டாம் ; உன்னைக் காக்கும் படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்"*** (எரே.1:8)என்று ஊக்கமூட்டினார் .வாலிபர்களே! கர்த்தருடைய பணியை செய்யும்படியான பணிந்துரையை ஏற்றுக்கொள்வதில் பயம் வேண்டாம்.கைவிடாத கர்த்தர் காலத்தின் கடைசி வரை நம்மோடிருப்பார் என்பது திண்ணம்.

ஏசாயா, தேவனுடைய பணிசெய்ய புறப்பட்டபோது அவரிடத்தில் நான் இந்த ஜனங்களுக்கு எதுவரைக்கும் போதிக்கட்டும் என்ற வினாவைத் தொடுத்தான்.ஆண்டவர், ***பூமி அவாந்தர வெளியாகும்வரை*** (ஏசாயா.6:11) என்ற விடையை அவனுக்குக் கொடுத்தார். வாலிபர்களாகிய நாம், இதிலிருந்து கற்றுக்கொள்வது யாதெனில் நம்முடைய இரட்சகர் பரத்திலிருந்து வெளிப்படும் வரை நம்முடைய தேவபணி ஓய்வின்றி இப்பூமியில் நடந்திடல் வேண்டும் என்பதே. ஏசாயா, தேவனைக் கண்டு தன் நிலை உணர்ந்தான். தேவ பணி செய்வ தற்காக வருகின்ற புதிய வருடத்தில் வாலிபர்களாகிய நாம் நம்மை ஒப்புக் கொடுத்து, தண்டில் சேவகம் செய்ய தடை நீக்கி புறப்படுவோம்.தேவ ஆசீர்வாதம் பெறுவோம்! ஆமென்! ✝

ஜே. பிக்கின்ஸ்

## நீதிமொழிகளில் புத்திமான்

1. தன் உதடுகளை அடக்குகிறவன் புத்திமான். 10:19;17:28
2. நீடிய சாந்தமுள்ளவன் மகா புத்திமான். 14:29
3. புத்திமானுடைய மனம் அறிவை சம்பாதிக்கும். 15:14
4. புத்திமானுக்கு ஞானம் உண்டு. 10:23
5. புத்திமான் தன் நடக்கையைச் செம்மைப்படுத்துகிறான். 15:21
6. புத்திமானைக் கடிந்துகொள், அவன் அறிவுள்ளவனாவான். 19:25
7. புத்திமானுடைய உதடுகளில் விளங்குவது ஞானம். 10:13

# வெளிப்படுத்தின விசேஷம்

## அதிகாரம்: ஒன்பது

வெளிப்படுத்தல் ஒன்பதாம் அதிகாரம், இந்நூலின் ஏழு முத்திரைகள் உடைக்கப்படுவதற்காக ஏழு தூதர்கள், ஏழு எக்காளங்களை ஊதுவதின் தொடர்ச்சியாக உள்ளது. இந்த ஏழில் முதல் நான்கு, எட்டாம் அதிகாரத்தில் வந்தது. அந்த அதிகாரத்தின் கடைசி வசனம், கடைசி மூன்று எக்காளங்கள் ஊதப்படும்போது, ஒவ்வொரு எக்காளத்துக்கும் ஒரு "ஐயோ" என்று வருமென்று காட்டினது. ஐந்து மற்றும் ஆறாம் எக்காளங்களும், அதோடு சம்பந்தப்பட்ட ஐயோக்களும், இந்த ஒன்பதாம் அதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது.

ஒன்றாம் வசனத்தில் **ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதினான்**. அப்பொழுது யோவான், வானத்திலிருந்து பூமியின்மேல் விழுந்த ஒரு நட்சத்திரத்தைக் கண்டான். வெளிப்படுத்தல் 8:10,11-ல் ***எட்டி*** என்றழைக்கப்பட்ட நட்சத்திரம், மூன்றாம் தூதன் எக்காளம் ஊதின போது, பூமியின்மேல் விழுந்தது. அது, நீரூற்றுகளை எட்டியைப் போல கசப்பாக்கிற்று. கீழே விழுந்த நட்சத்திரம், தேவனிடத்திலிருந்து வரும் நியாயத்தீர்ப்பைக் குறித்தது, இங்கே ஒன்பதாம் அதிகாரத்திலும் அதைப் போன்ற ஒரு நிலைதான் தோன்றுகிறது. இந்த நட்சத்திரம் விழுந்தபோது, ஐந்தாம் தூதனுக்கு பாதாளக் குழியின் திறவுகோல் கொடுக்கப் பட்டது. வெளிப்படுத்தின விசேஷத்தில்,**பாதாளக்குழி** என்பது, தீமைகளின் இருப்பிடமாக மறைமுகமான பொருளில் சொல்லப்படுகிறது. இதே நூலில் 11:7 மற்றும் 17:8 ஆகிய வசனங்களில்,பாதாளக் குழியிலிருந்து **மிருகம்** ஏறுகிறதாக உள்ளது. இன்னும், தேவனுடைய தூதன் சாத்தானை ஆயிரம் வருடங்களுக்கு பாதாளத்தில் கட்டி வைத்துள்ளான் என்றுள்ளது. (வெளி.20:1-3) இங்கே, வெளிப்படுத்தல் ஒன்பதாம் அதிகாரத்தில், பாதாளக்குழி திறக்கப்படுவதானது, தேவனுடைய உண்மையான ஊழியக்காரரைத் தவிர, மற்றவர்களை இம்சிக்கக் கூடிய அழிவுச் சக்தியை வெளியேற்றுகிறது.

வசனம்-2ல், ***ஐந்தாம் தூதன்,பாதாளக் குழியைத் திறந்தான்; உடனே பெருஞ்சூளையின் புகையைப் போல அந்தக் குழியிலிருந்து புகை எழும்பிற்று;அந்தக் குழியின் புகையினால் சூரியனும் ஆகாயமும் அந்தகாரப் பட்டது.*** எழும்பும் புகையானது, வரப்போகிற பயங்கரமான ஒன்றிற்கு அடையாளமாக உள்ளது. ***அந்தப் புகையிலிருந்து வெட்டுக்கிளிகள் புறப்பட்டு பூமியின் மேல் வந்தது; அவைகளுக்குப் பூமியிலுள்ள தேள்களின் வல்லமைக் கொப்பான வல்லமை கொடுக்கப்பட்டது.*** (வெளி.9:3). நாம் எல்லோரும் அறிந்திருக்கிறபடி, வெட்டுக்கிளிகள் தன்னால் முடியும், எதையும், எல்லாவற் றையும் பட்சித்துப்போடும் (யாத்.10:12-15;2நாளா.28:38,42) அதைப் போலவே, தேள்கள் தங்கள் வாலிலுள்ள கொடுமையான கொடுக்கின் மூலம்

எதிரிகளுக்கு வேதனையுண்டாக்கும். பாதாளத்திலிருந்து வெளியேறும் இந்த வெட்டுக்கிளிகள் பயங்கரமான வேதனை மிகுந்த அழிவு சக்தியை வெளிப்படுத்தக் கூடியதாக இருந்தது. ஆனால், 4-ம் வசனத்தில் நல்லசெய்தி உள்ளது. வெட்டுக்கிளிகளுக்கு, ***பூமியின் புல்லையும் பசுமையான எந்தப் பூண்டையும் எந்த மரத்தையும் சேதப்படுத்தாமல், தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைத் தரித்திராத மனுஷரை மாத்திரம் சேதப்படுத்த அவைகளுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது***.வெளி.7:1-3ல், இதே விதமான அறிவுறுத்தல், பூமியின் நான்கு முனைகளிலும் நிற்கக்கூடிய நான்கு தூதர்களுக்கு கொடுக்கப்பட்டது. தேவனுடைய ஊழியக்காரர்கள், தேவனுடைய தூதர்களாலே தங்கள் நெற்றிகளில் முத்திரையிடப் பட்டார்கள்.(வெளி.7:3-8) ஆகையால், தேவனுடைய ஊழியக்காரர்களாக இல்லாதவர்கள் மாத்திரமே வெட்டுக் கிளிகளால் சேதப்படுத்தப்படுவார்கள். அவர்களுக்கு, தாங்கள் மரணத்தை உடனடியாக விரும்புமளவுக்கு, மிக அதிகமான இம்சை இருக்கும். துன்மார்க் கருக்கு வெட்டுக்கிளிகள் என்ன செய்யும் என்பது சம்பந்தமாக, வசனம் 5,6-ல்,' ''மேலும் அவர்களைக் கொலை செய்யும்படிக்கு அவைகளுக்கு உத்தரவு கொடுக்கப்படாமல் ஐந்துமாதம் அளவும் அவர்களை வேதனைப் படுத்தும்படிக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது. அவைகள் செய்யும் வேதனை தேளானது மனுஷரைக் கொட்டும்போது உண்டாகும் வேதனையைப் போலிருக்கும். அந்நாட்களில் மனுஷர்கள் சாவைத் தேடியும் அதைக் காணாதிருப்பார்கள், சாகவேண்டுமென்று ஆசைப்படுவார்கள், சாவோ அவர்களுக்கு விலகி ஓடிப்போம்'' என்றுள்ளது.

இங்கே நாம் வாசிக்கும் ஒவ்வொரு பகுதியும், இந்தச் சூழ்நிலை, தேவனுடைய முழுக்கட்டுப்பாட்டில் இருக்கிறதென்பதை விளக்குகிறது. ஆம், வெட்டுக்கிளிகளை வெளியேற்றும்படி தேவன் தமது தூதனுக்கு திறவுகோலைத் தந்தார். பிறகு, தம்முடைய ஊழியக்காரர்களை அது சேதப்படுத்துவதிலிருந்து விலக்களித்தார். மற்றும் துன்மார்க்கர் மீது அவை எப்படிப்பட்ட தண்டனையை ஏற்படுத்தவேண்டுமென்று துல்லியமாக விளக்கியுள்ளார். ஆகவே,இது, துன்மார்க்கர் மீதான தேவனுடைய இறுதி நியாயத்தீர்ப்பல்ல என்பது தெளிவாகத் தெரிகிறது.ஏனெனில், ஐந்தாம் வசனத்தில், அவர்களைக் கொலை செய்ய கூடாதென்றும் **ஐந்து மாத** கால அளவுக்கென்றும் உள்ளது. இருப்பினும் இம்சை மிகக் கடுமையானதாக இருக்குமென்பது, நமக்குத் தெளிவாக ஒரு பாடத்தை கற்பிக்கிறது. அது தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடாதவர்கள் மேல் பயங்கரமான விளைவு இருக்குமென்பதும், தேவனுக்கு உண்மையாகவும், ஆர்வமாகவும், சேவை செய்வதுதான் அவருடைய கோபத்திலிருந்து தப்பிக்கும் ஒரே வழி என்பதுமே.

இப்பொழுது நம்முடைய முயற்சி,இந்த வெட்டுக்கிளிகள் யார் அல்லது என்ன என்று பார்ப்பதும் அல்லது அவை எதை அடையாளப்படுத்துகிற தென்பது. வசனம் 7-10-ல் அவைகள் விவரிக்கப்பட்டுள்ளது. ''அந்த வெட்டுக்

கிளிகளின் உருவம் யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணப்பட்ட குதிரைகளுக்கு ஒப்பாயிருந்தது. அவைகளுடைய தலைகளின்மேல் பொன்மயமான கிரீடம் போன்றவைகளிருந்தன; அவைகளின் முகங்கள் மனுஷருடைய முகங்கள் போலிருந்தது; அவைகளுடைய கூந்தல் ஸ்திரீகளுடைய கூந்தல் போலிருந்தது.அவைகளின் பற்கள் சிங்கங்களின் பற்கள்போலிருந்தன. இருப்புக் கவசங்களைப்போல மார்க்கவசங்கள் அவைகளுக்கு இருந்தன. அவைகளுடைய சிறகுகளின் இரைச்சல் யுத்தத்திற்கு ஓடுகிற அநேகங் குதிரைகள் பூண்ட இரதங்களின் இரைச்சலுக்கு ஒப்பாயிருந்தன. அவைகள் தேள்களின் வால்களுக்கு ஒப்பான வால்களையும்,அந்த வால்களில் கொடுக்குகளையும் உடையவைகளாயிருந்தன. அவைகள் ஐந்து மாதமளவும் மனுஷரைச் சேதப்படுத்துவதற்கு அதிகாரம் உடையவைகளாயிருந்தன''.(வெளி.9:7-10) இந்த விவரிப்பின்படி இந்த ***வெட்டுக்கிளிகள்*** வல்லமையுள்ள மகத்தான ஒரு ராணுவத்தை ஒத்திருக்கிறது. அநேகங் குதிரைகள் யுத்தத்திற்கு ஆயத்தமாயிருப்பதையும் பலம் பொருந்திய கவசமணிந்த மனிதர்கள்.(நீண்ட கூந்தலும், பலமான பற்களும்) அவைகளை ஓட்டுகிறதையும், அவைகள் கொஞ்ச காலத்திற்கு மனிதர்களை, தேள்களைப் போன்று கொட்டுகிற ஒரு காட்சியையும் காண்கிறோம். (ஐந்துமாதமென்பதை சொல்லர்த்த ரீதியில் எடுத்துக் கொள்ளக்கூடாது. ஆனால், அவை ஒரு வெட்டுக்கிளியின் வாழ்க்கைக்கு சமமான கால அளவை ஒத்திருக்கிறது).

இந்த வெட்டுக்கிளிகள், சொல்லர்த்த பொருளில் இல்லையென்பது தெளிவாகவே தெரிகிறது. ஆனால், மனிதர்களுடைய சில வகையான வல்லமையுள்ள ராணுவத்தைக் குறிப்பாக உணர்த்துகிறது. இந்த, வெட்டுக்கிளிகள் மாம்சத்திற்குப் பதிலாக, செடியைத்தின்கிற உண்மையான வெட்டுக்கிளிகளைப் போலல்லாமல் நேர் எதிரானதாக இருந்து, ஒரு ராணுவத்தைப் போல் நடந்து கொள்கிறது. மேலுமாக, உண்மையான வெட்டுக் கிளிகளுக்கு தங்கள் மேல் ***ராஜா*** இல்லை (நீதி.30:27) ஆனால், இந்த வெட்டுகிளிக்களுக்கு ***ஒரு ராஜன் உண்டு அவன் பாதாளத்தின் தூதன்;எபிரேயு பாஷையிலே அபெத்தோன் என்றும், கிரேக்க பாஷையிலே அப்பொல்லியோன் என்றும் அவனுக்குப் பெயர்*** (9:11) எபிரேயத்திலும், கிரேக்கிலும் இந்த ராஜாவின் பெயருக்குண்டான பொருள் **அழிப்பவன்** மீண்டுமாக மனிதர்களுடைய ராணுவம்ராஜாக்களினால் கட்டளையிடப்படும், ஆனால், உண்மையான வெட்டுக்கிளிகள் அப்படியல்ல. அவைகளுடைய ராஜாவின் பெயருக்குண்டான பொருள் இந்த ராணுவம் என்ன செய்யுமென்று கச்சிதமாக எடுத்துரைக்கிறது. சில சகோதரர்கள், இந்த ராணுவம் கி.பி.5-ம் நூற்றாண்டில், ரோம சாம்ராஜ்ஜியத்தின் மீது வெற்றிகரமாக படையெடுத்த முரட்டுத்தனமான ராணுவத்தைக் குறிக்கிறதென்றும் அல்லது முகமதுவையும், ஏழாம் நூற்றாண்டிலும் அதற்குப்பின்பும் அவனைப் பின்பற்றியவர்களின் ராணுவத்தைக் குறிக்கிறதென்றும் சொல்கின்றனர். ஆனால், இது துன்மார்க் கருக்கான தேவனுடைய பொதுவான நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறதா அல்லது குறிப்பானதொன்றைக் குறிக்கிறதா என்று திட்டமாகச் சொல்லமுடியாது.ஆகவே

இதற்கு விளக்கம் கொடுக்காமலிருப்பது நல்லது. வசனம் 12, ஒன்பதாம்அதிகாரத்தின் முதல் பாகத்தினுடைய சுருக்கமாக உள்ளது. ***முதலாம் ஆபத்து கடந்துபோயிற்று இவைகளுக்குப் பின்பு இன்னும் இரண்டு ஆபத்துக்கள், இதோ,வருகிறது.***

இரண்டாம் ஐயோ, ஆறாம் தூதன் எக்காளம் ஊதுவதோடு சம்பந்தப்பட்டுள்ளதென்று வெளி.9:13-21 வசனங்கள் விவரிக்கிறது. ***ஆறாம் தூதன் எக்காளம் ஊதினான். அப்பொழுது தேவனுக்கு முன்பாக இருந்த பொற்பீடத்தின் நாலுகொம்புகளிலுமிருந்து ஒரு சத்தந்தோன்றி எக்காளத்தைப் பிடித்திருந்த ஆறாம் தூதனை நோக்கி; ஐபிராத் தென்னும் பெரிய நதியண் டையிலே கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதர்களையும் அவிழ்த்து விடு என்று சொல்லக்கேட்டேன்*** என்றுள்ளது (9:13-14) மீண்டுமாக, நாம் தேவனிடத்தி லிருந்து நியாத்தீர்ப்புவருகிறதென்றும், கர்த்தர் எல்லாவற்றையும், தனது கட்டுப் பாட்டில் வைத்திருக்கிறார் என்றும் காண்கிறோம். ஐபிராத்து நதியண்டையில் கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதர்களும் அவிழ்த்துவிடப் பட்டார்கள் என்று வசனம் 15-ல் உள்ளது. அவர்கள், ***மனுஷனில் மூன்றிலொரு பங்கைக் கொல்லும் படிக்கு ஒருமணி நேரத்திற்கும், ஒரு நாளுக்கும், ஒரு மாதத்திற்கும், ஒரு வருஷத்திற்கும் ஆயத்தமாக்கப்பட்டிருந்தார்கள்.*** இந்த நியாயத்தீர்ப்பு, துன்மார்க்கருக்குத் தான் காத்திருக்கிறதென்று, வசனங்கள் 20-21 தெளிவு படுத்துகிறது. அவர்களில் மூன்றிலொருபங்கினர் கொல்லப்படு வார்கள், இங்கே தூதர்கள் ஆயத்தப்படுகிற நேரமும், துன்மார்க்கர் கொல்லப்படுகின்ற எண்ணிக்கையும் சொல்லர்த்த ரீதியில் எடுத்துக்கொள்ளலாம் என்பது சந்தேகத்திற் கிடமானது. இது எதை விளக்குகிறதெனில், தேவனுடைய நியாயத்தீர்ப்பானது விஸ்தாரமாகத் திட்டமிடப்பட்டு, பிறகு கன கச்சிதமாக நிறைவேற்றப்படுகிற தென்பதே.

ஐபிராத்து நதியண்டையிலிருக்கிற அந்த நான்கு தூதர்களும் மனிதர்களில் மூன்றிலொரு பங்கைக் கொன்ற எண்ணிலடங்கா, வல்லமை மிகுந்த ராணுவத்தை கொண்டுவந்தன. வசனம் 16, ***குதிரை சேனைகளாகிய ராணுவங்களின் தொகை இருபது கோடியாயிருந்தது*** என்கிறது. இது சொல்லர்த்த முறையிலிருக்கமுடியாத அளவுக்கு மிகப்பெரிய எண்ணிக்கையாயிருக்கிறது. ஆனாலும், இந்த ராணுவம் எதிர்க்க முடியாத அளவிலானது என்பதை எண்ணிக்கை தெரிவிக் கிறது. இக்கருத்தை மேலும் வலியுறுத்தும்படியாக குதிரைகளின் மேலிருந்த மனிதர்கள், "அக்கினி ரதமும், நீலநிறமும், ***கந்தக நிறமுள்ள மார்க்கவசங் களையுடையவர் களாயிருந்தார்கள்; குதிரைகளுடைய தலைகள் சிங்கங்களின் தலைகளைப் போலிருந்தன; அவைகளுடைய வாய்களிலிருந்து அக்கினியும், புகையும், கந்தகமும் புறப்பட்டன".*** (வெளி.9:17) என்று விவரிக்கப்பட்டுள்ளது. அவைக ளுடைய வல்லமை 18,19ம் வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ***"அவைக ளுடைய வாய்களிலிருந்து புறப்பட்ட அக்கினி, புகை, கந்தகம் என்னும் இம்மூன்றினாலும், மனுஷரில் மூன்றிலொருபங்கு கொல்லப்பட்டார்கள். அந்தக் குதிரைகளின் வல்லமை அவைகளுடையவாயிலேயும், வால்களி***

*லேயும் இருக்கிறது. அவைக ளுடைய வால்கள் பாம்புகளுக்கு ஒப்பானவை களாயும், தலைகளுள்ளவைகளாயும்மிருக்கிறது. அவைகளாலே சேதப் படுத்துகிறது".* இந்த விரிவான இராணுவத்தை விவரிப்பதற்கு, உருவக மொழி பயன்படுத்தப்பட்டுள்ளதென்பது, மறுக்க முடியாத உண்மை. ஆனால், இது எதை பிரதிநிதித்துவப்படுத்துகிறது? சில சகோதரர்கள், இது ஐபிராத்து நதிக்கு அப்புறத்தில், கிழக்கிலிருந்து பார்த்தியர்கள் ரோம பகுதியின் மீது படையெடுப்பதைக் குறிக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால், இவ்வசனங்கள் ஒரு குறிப்பிட்ட சம்பவத்தை குறிப்பதாக உணர்த்துகிறது என்று நாம் திட்டமாக சொல்லமுடியாது.''ஐயோ'' வினால்,ஒரு முக்கியமான பாடம் போதிக்கப்பட்டுள்ளது. அதை நாம் வசனங்கள் 20,21-ல் காணலாம்; மனிதன் தனது துன்மார்க்கத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும் அல்லது தேவ கோபத்தை சந்திக்க வேண்டும்.

வெளி.9:20-21, *''அப்படியிருந்தும் அந்த வாதைகளால் கொல்லப் படாத மற்ற மனுஷர்கள் பேய்களையும், பொன், வெள்ளி, செம்பு,கல், மரம் என்பவைகளால் செய்யப்பட்டவைகளையும், காணவும், கேட்கவும் நடக்கவு மாட்டதவைகளாயுமிருக்கிற விக்கிரகங்களையும் வணங்காதபடிக்கு தங்கள் கைகளின் கிரியைகளை விட்டு மனந்திரும்பவுமில்லை. தங்கள் கொலை பாதகங்களையும், தங்கள் சூனியங்களையும், தங்கள் வேசித்தனங்களையும் தங்கள் களவுகளையும் விட்டு மனந்திரும்பவுமில்லை''* என்று சொல்கிறது. இந்த 9-ம் அதிகாரத்தில் உள்ள இரண்டு ''ஐயோ'' க்களின் வாதைகள் எல்லா மனிதர்களையும் கொல்லவில்லை. ஏனெனில், அவைகள் துன்மார்க்கர் மனந் திரும்பும்படியாகவே ஏற்பாடு செய்யப்பட்டது. (இது, உலகத்தின்முடிவில் துன்மார்க்கருக்கான இறுதி நியாயத்தீர்ப்பல்ல என்பதை நிரூபிக்கிறது). இஸ்ரவேலை துன்மார்க்கத்திலிருந்து மனந்திரும்பச் செய்யும் படியாக , தேவன் பாபிலோனை, ''உபத்திரவத்தின் குகையாக''ப் பயன்படுத்தினார்.(ஏசா.48:10; எரே.24:5-7; எசே.6:8-10; 12:15,16). தவறு செய்பவர்களை மனந்திரும்புதலுக்கு உட்படுத்தும்படியாக, தேவன் பலவழிகளைக் கையாண்டார். (ஆமோ.4:6-11). ஆனால், மனந்திரும்ப மறுப்பவர்களை, *''உன் தேவனை சந்திக்க ஆயத்தப்படு''* என எச்சரிக்கிறார்.(ஆமோஸ்.4:12). இதேவிதமான சூழ்நிலைதான் வெளி9-ம் அதிகாரத்தில் காணப்படுகிறது. வாதைகளிலிருந்து தப்பியவர்கள், தங்கள் பொல்லாத கிரியைகளிலிருந்து மனந்திரும்ப மறுத்துவிட்டார்கள். பேய்களையும், விக்கிரகங்களையும் வணங்குவதிலிருந்து அவர்கள் மனந்திரும்பவில்லை. மற்றும் தங்கள் கொலைகள், சூனியங்கள், வேசித்தனங்கள், களவுகளிலிருந்து மனந்திரும்பவில்லை.(9.20-21).அவர்களுடைய முடிவான நித்திய தண்டனை அவர்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறது. இந்த அதிகாரம், தேவனுடைய உத்தம ஊழியர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும், தேவனுடைய பாதுகாப்பும், மீட்பும் உண்டென்று காட்டுகிறது. அதே சமயம், துன்மார்க்கர் மனந்திரும்பும்படியாக உறுதியாக எச்சரிக்கிறது. இல்லாவிடில் விளைவைச் சந்திக்க நேரிடும்.

**Jon Macon** **EZSR**

தெரிந்து கொள்ளுங்கள்

# சபை

## பல விதங்களில் விளக்கப்படுகிறது

தேவன் தம்முடைய வெளிப்பாட்டிலே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சபையை அநேக வழிகளில் நமக்கு விளக்குகிறார். சபையின் இயல்பை புரிந்து கொள்ளவும், அதன் முக்கியத்துவத்தைக் கற்றுணரவும், அவர் அப்படித் தெளிவாக்கியிருக்கிறார். இப்படிப்பட்ட அநேக வித்தியாசமான விவரிப்புகளையே நாம் இங்கு '' விளங்கங்கள்'' என்று குறிப்பிடுகிறோம். ஆவிக்குரிய பெரிய சத்தியங்களை, ஜனங்கள் தங்கள் அன்றாட வாழ்வில் நன்கு அறிந்துள்ள காரியங்களைக்கொண்டு தேவன் எளிதாகப் புரியும்படி செய்கிறார். இக்கட்டுரையில் சபையைக் குறித்துக் கூறப்படுகிற தேவனால் வெளிப்படுத்தப்பட்ட பத்து விளக்கங்களை சுருக்கமாகக் காணப்போகிறோம்.

(1.) **சபை குடும்பத்திற்கு ஒப்பானது:–** தேவன் நம்முடைய பரலோகப் பிதா, அவர் சித்தங்கொண்டு சத்தியவசனத்தினால் நம்மை ஜெநிப்பித்திருக்கிறார்(யாக்.1:18) அப்போஸ்தலனாகிய பவுல், ***தேவன் கிறிஸ்துவுக்குள் நமக்கு அளிக்கிற இரட்சிப்பின் மகத்துவத்தையும், நன்மையையும் உணர்ந்தவனாக.. இதினிமித்தம் நாம் பரலோகத்திலும்,பூலோகத்திலுமுள்ள முழுக் குடும்பத்துக்கும் நாமகாரணராகிய .....பிதாவை நோக்கி முழங்கால் படியிட்டு வேண்டிக்கொள்கிறேன்*** என்று எழுதினான். (எபே.3:14-15) மனிதர்கள் சுவிசேஷத்தை விசுவாசிக்கும் போது தேவனால் ஜெநிப்பிக்கப்படுகிறார்கள், பாவமன்னிப்பிற்காக சுவிசேஷத்தில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளுக்குக் கீழ்ப்படியும்போது,அவர்கள் தேவனுடைய குடும்பத்தில் பிறக்கிறார்கள். தங்கள் சுய விருப்பத்தின் பேரில், சுத்திகரிப்பை ஏற்கும்போது, தேவன் அவர்களுக்கு ***நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன். நீங்கள் எனக்கு குமாரரும், குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று.... வாக்களித்திருக்கிறார்.***(2.கொரி. 6:18). அவருடைய பிள்ளைகளாகிய கிறிஸ்தவர்கள் உறுதியாக பிதாவின் சாயலைக் கொண்டிருப்பார்கள். சபையின் அங்கத்தினர்கள் கிறிஸ்துவுடன் ஐக்கியம் கொள்ள அழைக்கப்பட்டுள்ளனர்.(1.கொரி.1:9) இந்த ஐக்கியம் பிதாவோடும், ஒருவரோடொருவரும் கொள்ளுகிற ஒன்றாகும். (1.யோவான்.1:3,4) ஆகையால், தேவனுடைய குடும்பத்தில் சகோதர சகோதரிகளாயிருப்பது ஆவியில் பிறந்த மிக நெருக்கமான, அருமையான ஒரு உறவுமுறையாகும்.

(2.) **சபை கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஒப்பானது:** ஒரு அழகிய வசனப்பகுதியில், மாம்ச சரீரத்தையும், கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தையும் பவுல் ஒப்பிட்டுப்பேசுகிறார்.ஒரு மாம்ச சரீரத்தில் அநேக அவயவங்கள் இருந்தும், ஒரே சரீரமாயிருக்கிறது. சரீரத்தின் தொடர் இயக்கத்திற்கு (அவைகள்) அநேக

அவயவங்களும் ஒற்றுமையாக இயங்குகின்றன. இப்படியாக, சபையும் தேவன் வடிவமைத்த நோக்கத்தை உணர்ந்து ஒற்றுமையாக செயல்படவேண்டும். ***நம்மில் இலட்சணமுள்ளவைகளுக்கு அலங்கரிப்பு வேண்டியதில்லை, சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, இப்படி சரீரத்தை அமைத்திருக்கிறார்.... நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும் தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்*** (1.கொரி.12:24,25,27) தேவன், ***கிறிஸ்துவை....எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி... சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்*** (எபே.1:22,23).ஒரே சரீரம் என்று சபையை பவுல் தெளிவாக்குகிறார் (எபே.4:4) தலையாகிய கிறிஸ்து சபையில் அனைத்து காரியங்களிலும் முதன்மைத்துவத்தை பெறவேண்டும்(கொலோ.1:18)

(3.) **சபை மணவாட்டிக்கு ஒப்பானது:** (ஆவிக்குரிய ரீதியில்) சபை கிறிஸ்துவுக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டது. பவுல் கொரிந்து பட்டணத்து சபைக்கு எழுதும்போது ***நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காகவே தேவ வைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன்.*** என்று எழுதுகிறார். (2.கொரி.11:2) எபேசியருக்கு எழுதும்போது புருஷன் மனைவியின் உறவுமுறையை கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் ஒப்பிட்டுக் காட்டுகிறார். புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து.... தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார். (எபே.5:25-27) ஆதலால் ***சபை கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள ஒன்றாகும்.*** (எபே.5:27) ரோமர்.7:4 யும் வாசிக்கவும்.

(4.) **சபை இராஜ்ஜியத்திற்கு ஒப்பானது:** சபை இயேசு கிறிஸ்துவுக்கு, தமது இராஜ்ஜியத்தில் இராஜாவாயிருக்கிற அவருக்கே கீழ்ப்பட்டிருக்க வேண்டிய ஒன்று. கிறிஸ்துவின் இராஜ்யம் ஆவிக்குரிய இராஜ்யமாகும். ***என்னுடைய இராஜ்யம் இந்த உலகத்திற்குரியதல்ல*** என்று அவர் சொன்னார் (யோவான்.18:36) அதாவது, அது, சவுல், தாவீது மற்றும் சாலமோன் போன்ற இராஜாக்கள் ஆளுகை செய்த தற்காலிகமான இராஜ்யமல்ல என்பதுதான் இதன் பொருள்.கிறிஸ்துவின் இராஜ்யம் பரலோக இராஜ்யமானதால், ***நமது குடியிருப்பு பரலோகத்தில் உள்ளது*** (பிலிப்பியர்.3:20) இருப்பினும் அப்போஸ் தலர் 2-ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளபடி, யூதர்களின் பண்டிகை நாளான பெந்தெகொஸ்தேநாளிலே கி.பி. 33-ல் ஸ்தாபிக்கப்பட்ட இந்த ஆவிக்குரிய இராஜ்யம் பூமியில் செயல்படுகிறது. பவுல் கொலோசெயக் கிறிஸ்தவர்களுக்கு தெரிவிக்கும்போது, ***இருளின் அந்தகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய இராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம் என்கிறார்.***(கொலோ.1:13) சுவிசேஷகனாகிய பிலிப்பு சமாரியாவுக்குப் போய் அங்குள்ள ஜனங்களுக்கு ***தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்தும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தைக் குறித்தும் பிரசங்கித்தான்*** (அப்.8:12) கி.பி.96-ல் அப்போஸ்தலனாகிய யோவான்,

ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கும் கிறிஸ்து, நம்மிடத்தில் அன்புகூர்ந்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மைராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினார். என்று எழுதினார்.(வெளி.1:5,6) இராஜ்யம் இனிமேல் வரப்போகிற ஒன்றல்ல... அது ஏற்கனவே வந்திருக்கிற ஒன்று, சபையும், இராஜ்யமும் ஒன்றே.கர்த்தருடைய சபையில் அங்கம் வகிப்பது அவருடைய இராஜ்யத்தில் பிரஜையாயிருப்பதாகும்.

(5) **சபை ஆட்டு மந்தைக்கு ஒப்பானது:** கிறிஸ்தவர்களை ஆடுகள் என்றும் இயேசு கிறிஸ்துவை மேய்ப்பனென்றும் வேதம் கூறுகிறது. இப்படியாக சபை மேய்ப்பனின் அன்பையும் பராமரிப்பையும் எதிர்நோக்கியிருக்கிறது. சபை அவரது சத்தத்தைக் கேட்டு எச்சரிக்கையடைகிறது ***"... ஆடுகள் அவனுடைய சத்தத்தை அறிந்திருக்கிறபடியால், அவனுக்குப்பின் செல்லுகிறது."*** (யோவான்.10:4) சபையில் மூப்பர்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர்களுக்கு அப்போஸ்தலனாகிய பேதுரு, ***உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து... மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்புச் செய்யுங்கள் என்று அறிவுறுத்துகிறார்.***(1.பேதுரு.5:2-3) ***அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும் போது, மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்*** என்றார் (1.பேதுரு.5:4) சிதறி வழிதப்பிப்போன ஆடுகளைப் போல் இருந்த கிறிஸ்தவ மக்கள் இப்பொழுது மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டுள்ளார்கள் (1.பேதுரு.2:25).

(6) **சபை வீடாக ஒப்பிடப்படுகிறது** : சபை என்பது செங்கற்களைக் கொண்டோ, கல் மற்றும் மரங்களைக் கொண்டோ கட்டப்பட்ட கட்டிடமல்ல, அது ஆவிக்குரிய வீடு. அப்போஸ்தலனாகிய பேதுரு கிறிஸ்தவர்களுக்கு எழுதுகையில் ***ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளை செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்*** என்று கூறுகிறார்.(1.பேதுரு.2:5) பவுலும் எபேசுப் பட்டணத்துக் கிறிஸ்தவர்களுக்கு எழுதிச்சொன்னதாவது: ***அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள். அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார். அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது.*** (எபே.2:20-21) கொரிந்து பட்டணத்து சபையாரிடத்தில் நீங்கள் ***தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறார் என்றும் அறியாதிருக்கிறீர்களா?*** என்று கேள்வி கேட்கிறார் (1.கொரி.3:16)

(7) **சபை திராட்சைத் தோட்டத்திற்கு ஒப்பானது:** பாலஸ்தீனாவில் அநேக திராட்சைத் தோட்டங்கள் இருந்தன.அங்கேதான் நமது கர்த்தரும் வாழ்ந்து, தமது தனிப்பட்ட ஊழியக்காலத்தில் போதித்துக்கொண்டிருந்தார். தமது நாட்களில் வாழ்ந்த ஜனங்கள் தேவனுக்கு செய்யும் ஆராதனை மற்றும் ஊழியத்தை விளக்க

படுத்தும் பொருட்டு ஜனங்கள் நன்கு அறிந்த உதாரணத்தை பயன்படுத்தி கிறிஸ்து போதித்தார். இப்படியாகத்தான் இராஜ்யம் அல்லது சபை, ஒரு திராட்சைத் தோட்டத்திற்கு ஒப்பிடப்படுகிறது. தயவு செய்து மத்தேயு, 20:1-16 வாசிக்கவும். பவுல் கிறிஸ்தவர்களுக்கு ***ஆகையால் எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக*** என எழுதினார். (1.கொரி.15:58) மத்தேயு 21:28-41-ல் திராட்சைத் தோட்டத்தை உருவகப்படுத்தி, இராஜ்யத்தின் இயல்பை இயேசு தெளிவாக்குகிறார்.

**(8.) சபை முத்துக்கு ஒப்பிடப்படுகிறது:** மேலும் ***பரலோக ராஜ்யம் நல்ல முத்துக்களை தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது,அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்*** என்று இயேசு சொன்னார். (மத்.13:45-46) இந்த உவமையைக் கொடுத்ததன் மூலம் இராஜ்ஜியம் ஒப்புயர்வற்றது என்ற தலையாயப் போதனையைக் கொடுத்ததுடன், இந்த வார்த்தையின் அருதித் தன்மையையும் காட்டியுள்ளார். இதைப் புரிந்துக்கொள்வதன் மூலம், தேவன் கிறிஸ்துவுக்குள் கிருபையாக அருளிச்செய்யும் அனைத்து ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும், பாவமன்னிப்பும் இதன்உள்ளடக்கம் என்பதைப் புரிந்து கொள்கிறோம். ***நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்;அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.*** (எபே.1:3) எனவே, விலையுயர்ந்த முத்தை வாங்குதல் என்பது இதுதான்! பூமிக்குரிய எவ்வளவு சொத்தும்... சொல்லப்போனால் முழு உலகமும் கூட..... ***ஒரு மனிதனின் ஆத்தும இரட்சிப்புக்கு ஈடானதல்ல! மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப் படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?*** என்று இயேசு கேட்டார்.(மத்.16:26) இயேசு கிறிஸ்துவின் இந்த உபதேசங்களை தங்கள் இருதயங்களில் ஏற்றுக்கொண்டு உணர்வடைந்த ஜனங்கள் இராஜ்யத்தையும்,அதிலுள்ள ஆசீர்வாதங்களையும் ஏற்றுக்கொண்டு தங்களின் இவ்வாழ்வில் நிச்சயமாய் பெற்றுக் கொள்ள தேவையான எந்த தியாகத்தையும் செய்வது அவசியம் என்பதைக் காணலாம். அன்பான வாசகரே! கர்த்தருடைய சபையில் அங்கமாவது தான் ஒரு மனிதன் பெற்று அநுபவிக்கிற மிகப்பெரிய ஆசீர்வாதமாகும்.

**(9.) சபை இராணுவத்திற்கு ஒப்பானது :** நிச்சயமாகவே சபை தீமைகளோடு எதிர்த்துப்போராடுகிற யுத்தக்களத்தில் இருக்கிறது. ஆனால், இந்த யுத்தம், யுத்த விமானம், டாங்குகள், துப்பாக்கிகள், அணுகுண்டுகள் ஆகியவற்றை பயன்படுத்திப் போராடுகிற மாம்சக் காரியங்களுக்கான போராட்டம் அல்ல. பவுல், ***நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல. எங்களுடைய போராயுதங்கள், மாம்சத்துக்கேற்றவை***

***களாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவ பலமுள்ளவை களாயிருக்கிறது என்று கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார்.*** (2.கொரி.10:3,4) தீமோத்தேயுவிற்கு பவுல் எழுதி, "நீயும், இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி" என்று சொன்னார் (2.தீமோ.2:3).எபேசு பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு அவர் எழுதும்போது " கடைசியாக என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத்திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்" என்று சொன்னார் .(எபே.6:10-17) வசனங்களின் பகுதியை வாசிக்கவும்.

(10) **சபை குத்துவிளக்குகளுக்கு ஒப்பானது:–** இன்றுள்ள துருக்கியின் மேற்கு எல்லையில் இருந்த ஏழு சபைகளுக்கு கர்த்தர் யோவான் மூலமாக எழுதிய நிருபங்களை வெளிப்படுத்தின விசேஷம் இரண்டு, மூன்று அதிகாரங்களில் காண்கிறோம். இந்த நிருபங்களின் அறிமுகமாக அடையாளப்படுத்தும் பொருட்டு அந்த ஏழு பிராந்திய சபைகளையும் ஏழு பொன்குத்துவிளக்குகளாக பேசுகிறார் "... ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம்" (வெளி.1:20). இயேசு தமது சீஷர்களிடத்தில் " நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்: மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது; விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல் விளக்குத் தண்டின் மேல் வைப்பார்கள்,அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் [illegible]க்கும். இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளை கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது" என்றார்.(மத்.5:14-16) பிலிப்பு பட்டணத்து சபைக்கு பவுல் "..... ஜீவ வசனத்தைப் பிடித்துக் கொண்டு உலகத்திலே சுடர்களைப் போல பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும் தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு..." என்று எழுதுகிறார்.(பிலி.2:14,15).

நண்பரே, தேவன் மேற்குறித்த " விளக்கங்களினாலே" தமது பரிசுத்த வேத எழுத்துக்களைக் கொடுத்து, சபையின் தன்மையை நீங்கள் தெளிவாய் புரிந்து கொள்ளச் செய்தார் என்பதை உங்கள் மனதில் பதியவைக்க எனது ஆலோசனைகளை கொண்ட எனது சுருக்கமான கட்டுரையை நிறைவுசெய்கிறேன். கிறிஸ்தவனாயிருப்பதன் பொருள் என்ன என்பதை நீங்கள் புரிந்திருப்பீர்கள். தயவு கூர்ந்து ஜெபத்தோடும் கவனத்தோடும் சபையைக்குறித்த இந்த பத்து தெய்வீக விளக்கங்களை பிரதிபலிப்பீர்களாக.அப்படிச் செய்வதன் மூலம் பிரிவினையற்றதும், ஒப்புவமை இல்லாததுமாகிய சபையின் தன்மையை நீங்கள் காணுவீர்கள் என நம்புகிறேன். சபை தேவனால் வடிவமைக்கப்பட்டது. அதற்கான மாதிரி புதிய ஏற்பாடு. சுவிசேஷத் தினால் இரட்சிக்கப்பட்டவர்கள் அதிலே சேர்க்கப்படுகின்றனர். தேவன் கிறிஸ்து இயேசுவுக் குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே அவரது அநந்த ஞானம் சபையின் மூலமாய் தெரியவரும் பொருட்டாக, நம்மால் இயன்ற அளவுக்கு மிகுந்த அறிவை பெற்றுக்கொள்வது அவசியமாகும்.(எபேசியர் 3:8-11).

**Maxie.Boren**

# உள்ளான மனுஷன்
# நாளுக்கு நாள் புதிதாக்கப்பட வேண்டும்

வயது முதிர்ந்த ஒருவரைப் பார்த்து அவரது நண்பர்,'' இந்த முதிர்ந்த வயதிலும் நீங்கள் எப்படி சுறுசுறுப்புடன் உற்சாகமாய் இருக்கிறீர்கள்'' என்று கேட்ட போது பூத்து குலுங்கிய அரப்பின் மரத்தை சுட்டிக் காட்டி இவ்வாறு கூறினார். இந்த மரம் பழமையானது என்றாலும் இப்போதிருக்கும் அழகான மலர்களைப்போல இதுவரை நான் பார்த்ததே இல்லை. ஒவ்வொரு ஆண்டும் இந்த மரத்துக்குப் புதிய அடிமரப்பட்டைகள் வளருகின்றன. இந்த அரப்பின் மரத்தைப் போல ஒவ்வொரு ஆண்டும் புதிதாக என்னிடத்தில் ஒரு மாற்றத்தை, வளர்ச்சியை உருவாக்க முயற்சி செய்கிறேன் என்றார் அந்த நண்பரிடம்.

நம்முடைய பரலோகத்தின் தேவன் கூட தம்முடைய பிள்ளைகளிடத்தில் நாளுக்கு நாள் ஒரு புதிய வளர்ச்சியை எதிர்ப்பார்க்கிறார், கடந்து போகும் ஆண்டுகள் நமது சரீரத்தில் முதுமையை உண்டாக்கினாலும் நமது ஆத்துமாவை தொடர்ந்து புதுப்பிக்கப்படும் சத்தியைப் பெற்றுள்ளது. வாழ்க்கையில் அனுபவங்களின் மூலம் கூறுகிய மனோபாவங்கள் பெரிய வளர்ச்சியாக விசாலமடையக் கூடும்.

பவுல் இயேசு கிறிஸ்துவோடுள்ள தனது உறவில் புதியவளர்ச்சியை உருவாக்குவதற்கான தூண்டுதலை கண்டு கொண்டார். அவர் கிறிஸ்துவை இன்னும் அதிகமாக அறிந்து அவருக்குள் அதிகமாக வளரவும் தன்னை முழுமையாக கிறிஸ்துவுக்குள் ஒப்புக் கொடுத்து கிறிஸ்தவின் சிந்தையில் நாளுக்கு நாள் வளர்ந்து தன்னை புதுப்பித்துக் கொள்ளவும், தேவன் தன் வாழ்க்கையில் தொடர்ந்து கிரியை செய்து நன்மையின் ஒரு பங்காக வாழ்க்கைச் சோதனைகளை ஏற்றுக் கொள்வதும் கிறிஸ்துவில் தனது நம்பிக்கையின் பெலத்தை பற்றிக் கொண்டிருப்பதும் பவுலுக்கு அவசியமாக இருந்தது. இதைக்குறித்து பவுல் கூறுவதைக் கேட்போம்.தயவு செய்து அதைக் கேட்டு சிந்தித்து செயல்படுவோம் வாருங்கள்.

ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை, ***''எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது''*** 2.கொரி.4:16 நம்முடைய வாழ்க்கையிலே ஒவ்வொரு நாளும் அழிந்து போகக் கூடிய சரீர வளர்ச்சியையும் உலக தேவைகளையும் குறித்து புதுப்பித்துக் கொள்ளஅதிகமான முயற்சிகளை எடுத்து அலைந்து திரிந்து பிரயாசப்பட்டு வருத்தப்பட்டுக் கொண்டு இருக்கிறோம்.ஆனால் நம்முடைய அழியாத ஆத்தும வளர்ச்சியைக் குறித்து நாம் முயற்சி செய்துக்கொண்டு இருக்கிறோமா? அல்லது அதை நினைத்து வருத்தப்பட்டிருக்கிறோமா? நாம் ஒரு கனம் சிந்திப்போம்.

உலகத்திலே நமக்கு அநேக பிரச்சினைகள் சோதனைகள், வியாதிகள், போராட்டங்கள் உண்டு.இவைகள நாம் எதிர்கொள்ள வேண்டுமானால் நமக்கு பெலன் தேவை. (ஆத்துமாவில்) அதற்கு உள்ளான மனுஷனில் வல்லமையாய் பலப்பட வேண்டும் என்று பவுல் கூறுகிறார் (எபே.3:16,17) அப்படியானால் இந்த பெலனைக் கொடுப்பவர் யார் என்று தாவீது சொல்கிறார் கேட்போம் (சங்.68:36) ***இஸ்ரவேலின் தேவன் தம்முடைய ஜனங்களுக்குப் பெலனையும் சத்துவத்தையும் அருளுகிறவர்;***

ஆகவே நாம் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும் (யாக் 1:5) நமது ஆண்டவரும் ***கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்;*** அதையும் என் நாமத்தினால் கேட்டால்தான் பெற்றுக் கொள்வீர்கள் (யோவான் 14:14) (சங்.19:7-10) பெலமுள்ள தேவனுடைய வார்த்தைகள் தேனிலும் தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளி தேனிலும் மதுரமானது.ஆகவே தேவனுடைய வார்த்தையை ஆகாரத்தைப் பார்க்கிலும் அதிகமாய் காத்துக் கொள்ள வேண்டும் என்று தேவதாசனாகிய யோபு கூறுகிறார். (யோபு.23:12), (யோபு 4:32) இந்த ஆவிக்குரிய ஆகாரத்தை அனுதினமும் நாம் உட்கொள்ள வேண்டும் என்கிறார் பவுல், நாம் அவருடைய சத்துவத்தின் வல்லமையில் பலப்பட்டு ஒவ்வொரு நாளும் புதுப்பிக்கப்பட வேண்டும் (ரோ.15:14)

எப்படி எதைக் கொண்டு புதுப்பிக்கப்பட வேண்டும்? உள்ளத்திலே புதிதான ஆவி உள்ளவர்களாகி மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனிதனை தரித்துக் கொள்ளும் பொழுது (எபே.4:23-24) இதைக்குறித்து கொலோசே பட்டணத்து கிறிஸ்துவின் சபை யாருக்கு நிருபணம் பண்ணுகிறார் பவுல் (கொலோ 3:10) தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே.

ஒரு கிறிஸ்தவன் ஞானஸ்நானம் பெற்று அநேக ஆண்டுகள் ஆகியும் அவரிடத்தில் வளர்ச்சியில்லை (ஆவிக்குரிய)ஏனென்றால் அவர் சரீர வளர்ச்சியையும் தேவைகளையும் அதிகமாய் தேடும் பொழுது அங்கே ஆவிக் குரிய வளர்ச்சி தடைபடுகிறது. ஒரு குழந்தை பிறந்து அநேக ஆண்டுகள் ஆகியும் வளர்ச்சியின்றி நடக்காமல் பேசாமல் அப்படியேயிருந்தால் அந்தக் குழந்தையை பெற்றெடுத்தத் தாய் எவ்வளவு வேதனைப்படுவாள்.அதைவிட அந்தக் குழந்தைப் பிறவாமல் இருந்திருந்தாலோ,அல்லது பிறந்தவுடனே மரித்துப் போயிருந்தாலோ, நலமாயிருந்திருக்கும் என்றல்லவா நினைத் திருப்பாள் அந்த தாய்.

நாம் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய பிள்ளையாய் புதிதாய்ப் பிறந்து அநேக ஆண்டுகள் ஆகியும் வேதவாசிப்பு இல்லாமலும் ஜெபதாகம் இல்லாமலும் இருப்போமானால் தேவன் எவ்வளவு வேதனைப்படுவார்? அந்தத் தாய்ப் பெற்றெடுத்தப் பிள்ளையினிடத்தில் அநேகக் காரியங்களை தன்

இருதயத்திலே வைத்து ஏக்கத்தோடு இருப்பாள். அதைக் காட்டிலும் மக்கள் மத்தியிலே அந்தப் பிள்ளை தன் தாயைக் குறித்து சாட்சி சொல்ல வேண்டும் பெருமைப்படுத்த வேண்டும் என்றல்லவா நினப்பாள். நம்முடைய பரலோகத்தின் தேவன் கூட நம்மிடத்திலே அவைகளைக் காட்டிலும் நாம் அவருக்கு சாட்சியாய் ஜீவிக்க வேண்டும். அவரி டத் திலிருந்து கிறிஸ்துவின் மூலமாய் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

நாம் அவருடைய குமாரன் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை (மரணம் அடக்கம், உயிர்த்தெழுதல்) அநேக மக்களுக்குச் சொல்லி இரட்சிப்புக்குள் வழி நடத்த வேண்டும் என்றல்லவா எதிர்ப்பார்ப்பார். இதை வாசித்து சிந்தித்துக் கொண்டிருக்கும் தேவனுடைய பிள்ளைகளே, நீங்கள் ஞானஸ் நானம் பெற்று தேவ கட்டளையை நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறீர்கள் அல்லது பிறந்து வளர்ச்சி இல்லாமல் மக்களால் வெறுக்கப்படும் பிள்ளையைப் போலியிருக்கிறீர்களா! யோசித்துப் பாருங்கள் நியாத்தீர்ப்பு நாளிலே தேவன் நம்மிடத்திலே கணக்கு கேட்க ஆயத்தமாயிருக்கிறார்.

பவுல் கூறுகிறார், ***தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்ய தகுதியுள்ளவனாகவும் இருக்க வேண்டும்*** (1.தீமோ.3:16) என்று நாம் இப்படியிருக்க வேண்டுமானால் நாளுக்கு நாள் புதிதாக்கப்பட வேண்டும். கர்த்தருடைய வசனத்தைக் கொண்டு நம்மைப் புதிப்பித்துக் கொள்ள வேண்டும். அதானலே நாம் நம்முடைய வாழ்க்கை முறைகளையும் புதுப்பித்துக் கொள்ளமுடியும். கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலன் உண்டு என்று பவுல் சொல்வது போல நாமும் சொல்வோமாக. இதை வாசிக்கும் நண்பர்களே! நீங்களும் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாய் இருக்க முடியும். நீங்கள் உங்களை புதுப்பித்துக் கொள்ள விரும்பினால் நீங்கள் இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டு விசுவாசித்து பாவத்தைவிட்டு மனந்திரும்பி கிறிஸ்துவை உங்கள் வாயினாலே அறிக்கையிட்டு இயேசுவின் நாமத்தினாலே பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று (தண்ணீரில் மூழ்கி) இரட்சிக்கப்படுவீர்கள்.

***யோசுவா செல்வம்***

***அரக்கோணம்***





# HEAR THE VOICE OF TRUTH
## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 -9.00<br>9.00 - 9.15 | Box.3815<br>New Delhi -110049 | SUNNY DAVID |
| ENGLISH | Friday | 7.45 - 8.00 | Box.3815<br>New Delhi -110049 | J.C. CHOATE |
| TELUGU | Sun,Mon<br>Tue, Thu | 2.00 -2.15 . | Box . 80<br>Kakinada -533 001 | JOSHUA<br>GOOTAM |
| TAMIL | Sunday<br>Tuesday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00<br>5.30 - 5.45<br>5.45 - 6.00<br>5.30 - 5.45 | Box . 8405<br>Bangalore - 560 084 | P.R.SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum -695 034 | P.K.VARGHESE |
| KANNADA | Sunday | 1.45 - 2.00 | Box.448<br>Bangalore - 560 004 | ROBERT<br>RATHNAKAR |

***Please write to these address for Bible Correspondence Course***

***Magazines and other Christian Literatures***

**ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST**

REGISTERED NEWS PAPER
RNI No. 47661 / 87 - NEW DELHI

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக்கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி.

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட ஓர் இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர்
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

*இயக்குநர்,*
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**
த.பெ.எண் – 27, காங்கேயம் – 638 701.

வெளியிடுவோர்
**கிறிஸ்துவின் சபையார்,**
தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701
தமிழ்நாடு, இந்தியா
✆ 04257-20030

**Published by Church of Christ, Kangayam.**
**Printed at Konar Printers, Madurai. Editor : S. RAJANAYAGAM,**